Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில்
புதுப் பொலிவுடன்
முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
விசேட விலையில்
BBQ
தொடர்பு: 0771064385
0776943479
70/6, K.K.S. Road,
JAFFNA
(C/1615)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 29 வெள்ளிக்கிழமை (13.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 286
















# வடக்கில் காணிப் பதிவு சுற்றுநிருபம் வாபஸ்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட இருந்த காணிப்பதிவு தொடர்பான சுற்று நிருபத்தை விலக்கிக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி காணிப் பதிவுக்கு எதிராகத் தாக்கல் செயயப்பட்ட வழக்கும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

காணிப் பதிவுக்கு எதிரான மேற்படி வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, திபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சம்பந்தப்பட்ட சுற்று நிருபத்தை விலக்கிக்கொள்வது பற்றிய அரசின் முடிவை அரசு சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யுவன்ஜன் விஜேதிலக எழுத்துமூலம் சமர்ப்பித்தார்.

வடக்கு, கிழக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் மேற்படி சுற்றுநிருபம் 2010 ஆம் ஆண்டு காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டது. இதனையடுத்து இந்த விவகாரம் பெரும சர்ச்சையை தோற்றுவித்திருந்தது. இப்பதிவுகள் தொடர்பில் பிணக்குகள் எழும் போது அது குறித்து விசாரித்து, காணி உரிமையாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட பிரதேச அரச அதிகாரிகள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் போன்றோரைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவிடம் ஒப்படைக்கவும் இந்த சுற்று நிருபத்தில் வகை செய்யப்

19 ஆம் பக்கம் பார்க்க

## மேற்குலகின் தேவைக்காக பொன்சேகா செயற்படுகின்றார்
### விமல் வீரவன்ச ஆவேசம்

மேற்குலக நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா முயற்சித்து வருவதாக ஜே.என்.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. இதன் ஓர் கட்டமாகவே சரத் பொன்சேகா அண்மையில் மத்திய கிழக்கில் ஏற்பட்ட கிளர்ச்சியைப் போன்று நாட்டிலும் மக்கள் கிளர்ச்சி செய்யவேண்டுமென கோரியிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல்களில் முடிந்தால் எதிர்க்கட்சிகள் வெற்றியீட்டிக் காட்டட்டும் என ஜே.என்.பி தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். மத்திய கிழககில் ஏற்பட்டதனைப் போன்று கிளர்ச்சி

19 ஆம் பக்கம் பார்க்க

## அவுஸ்ரேலியாவிற்கு ஆட் கடத்தல் கடற்படை சிப்பாய்களுக்கும் தொடர்பு?

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு ஆட்களை அழைத்துச் செல்லும் வர்த்தகத்துடன் சில கடற்படையினரும் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந் துள்ளது. குற்றப் புலனாய்வு திணைக்களம் மேற்கொண்டு வரும் விசாரணைகளில் இந்த வர்த்தகத்துடன் தொடர்புடைய சில கடற்படையினர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அடையாளம் காணப்பட்டுள்ள ஏனைய கடற்படையினரைக் கைது செய்வதற்காகக் குற்றப்புலனாய்வுப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் வெளிநாட்டு தூதுவர்கள் நெடுந்தீவிற்கு நேற்று விஜயம்



வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் கடமையாற்றும் இலங்கைத் தூதுவர்கள், மற்றும் பிரதிநிதிகள் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நெடுந்தீவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர் இதன்போது கனடா, ரஷ்யா, மலேசியா, இத்தாலி, பங்களாதேஸ், பாகிஸ்தான் தென் ஆபிரிக்கா, பாகரேன், போன்ற நாடுகளைச் சேர்ந்த சில தூதுவர்களும் இவ் நாடுகளில் கடைமையாற்றும் தூதரக அதிகாரிகளும் என சுமார் எண்பதுக்கும் மேற்பட்டோர் விஜயம் செய்தனர் இவர்களுடன் நெடுந்தீவு பிரதேசத்துக்கு முதன் முதலாக புதிய அரசாங்க அதிபர் திரு

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தலையெடுக்கும் போதை பொருள் வருகிறது மோப்ப நாய்கள்

வடக்கில் வெடிபொருட்களையும், போதைப்பொருட்களையும் கண்டறியும் திறன் வாய்ந்த ஆறு மோப்ப நாய் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன. பொலிஸ் திணைக்களத்தின் நாய்கள் பிரிவை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 49 பிரிவுகள் காணப்படுகின்ற நிலையில் மேலும் 6 பிரிவுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார். இந்த புதிய பிரிவுகள்,

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு பிளவுபடும் ஆபத்து
### வேட்பாளர் ஒதுக்கீட்டினால் விபரீதம்

கிழக்கு மாகாணசபைத் தேர் தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்குள் வேட்பாளர் ஒதுக்கீடுகளைத் தீர்மானிப்பதில் ஏற்பட்டிருக்கும் ஸ்தம்பித நிலைமை பரஸ்பர விடடுக் கொடுப்புக்களுடன் தீர்த்து வைக்கப்படவில்லை என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு அணிகள் தேர்தலில் களமிறங்கும் விபரீத நிலைமை ஏற்படலாம் என ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## இன்னும் ஓயாத போராட்டம் பட்டதாரிகள் யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் தம்மைப் பட்டதாரி பயிலுனர் நியமனத்திற்கு உள்வாங்குமாறு கோரி யாழ். செயலகத்தின் முன்பாக நேற்றுக காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணி முதல் யாழ். செயலகத்தின் முன்பாக ஒன்றுகூடிய பட்டதாரிகள் தமக்கான பட்டதாரிப் பயிலுனர் நியமனத்தை வலியுறுத்தும் பதாதைகள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

கல்வியமைச்சு உட்பட பல்வேறு மட்டங்களில் தமது நியமனம் குறித்துத் தாம் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாகத் தம்மைப் பட்டதாரி நியமத்திற்குள் உள்வாங்க முடியாது என்று கல்வியமைச்சரும் தெரிவித்திருக்கும் நிலையில் யாழ். அரசாங்க

19 ஆம் பக்கம் பார்க்க

ஒவ்வொரு சனிக்கிழமையும்
தினமுரசில்
மாணவர்கள் பங்குகொள்வதற்கான
பல்வேறு போட்டிகள்.
அதிக போட்டிகளில்
வெற்றிபெறும் மாணவர்களுக்கு
பெறுமதி மிக்க பரிசுகள்.

நாளை தினமுரசில் எதிர்பாருங்கள்.

# முட்கொம்பன் அ.த.க பாடசாலைக்கு 200 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



(யாழ்ப்பாணம்)

முட்கொம்பன் அ.த.க பாடசாலைக்கு பத்து வகுப்பறைகளை உள்ளடக்கிய இரண்டு மாடிக் கட்டடத்தை அமைப்பதற்கும் இரண்டு ஆசிரியர் விடுதிகளை அமைப்பதற்குமாக இருநூறு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அத்தோடு விஞ்ஞான ஆய்வு கூடத்தினை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

முட்கொம்பன் அ.த.க பாடசாலையில் அமைக்கப்பெற்ற வகுப்பறைக் கட்டடத்தினை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இப்பகுதி மக்கள் கல்வியில் அதிக ஆர்வமுடையவர்களாகத் திகழ்வதையும் கடந்த காலத்தில் வளப்பங்கீடுகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த பாரபட்ச நிலை காரணமாகவே இவ்வாறான பாடசாலைகள் எந்தவித வளங்களுமற்ற நிலையில் இயங்கிவருவதையும் நாம் அறிவோம்.

அத்தோடு யுத்தம் இப்பகுதிக் கல்விநிலையங்களை முற்றாக அழிவுக்குட்படுத்தியுள்ளது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இன்று நாம் பின்தங்கிய இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் வளர்ச்சியினை மையமாக வைத்தே திட்டங்களை வகுத்துள்ளோம்.

அதன் அடிப்படையிலேயே முட்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட இக்கட்டடத்தினை மிகக்குறுகிய காலத்திற்குள் அமைப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தோம்.

இருப்பினும் சுமார் 450 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டியங்கும் இப்பாடசாலைக்கு இவ் ஐந்து வகுப்பறைகள் போதுமானதாக இல்லை என்பதை நாம் அறிவோம்.

எனவே மேலும் பத்து வகுப்பறைகளை உள்ளடக்கிய இரண்டு மாடிக்கட்டடத்தை அமைப்பதற்கும் இரண்டு ஆசிரியர் விடுதிகளை அமைப்பதற்குமாக இருநூறு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இதேவேளை, இப்பாடசாலைக்கு மின் பிறப்பாக்கியினைக் கொள்வனவு செய்வதற்காக தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபாய் நிதியினையும் ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்தார்.

அமைக்கப்பட்ட ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட இக்ட்டடத்தினை நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் நேற்றுக் காலை 10.30 மணிக்கு திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் திலீபனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேச சபையின் உறுப்பினர்களான இராமலிங்கம், குகேந்திரன் ஆகியோரும் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சபாநாயகம், பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி தர்மரட்ணம், பூநகரி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சொர்க்கநாதன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன் ஆகியோரும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

## விபத்தில் காயமடைந்த இளம் பெண் சாவு

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை ஏழாலைப் பகுதியில் நடைபெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த கிருட்டிணன் சாந்தி (வயது - 30) என்ற பெண்ணே இவ்வாறு சிகிச்சை பயனின்றி மரணமானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை துவிச்சக்கர வண்டியில் ஏழாலை உத்தமன் சிலையடியில் சென்று கொண்டிருக்கையில் நேராக வந்த கன்ரர் வாகனம் இவர் மீது மோதியதில் படுகாயமடைந்தார். இவர் அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி கடந்த புதன்கிழமை மரணமாகியுள்ளார்.

அத்துடன் குறித்த கன்ரர் வாகனச் சாரதி தலைமறைவாகியுள்ளதாகவும் சுன்னாகம் பொலிஸார் அவரைத் தேடிவருவதாகவும் தெரியவருகின்றது. (பா)

## மாபெரும் துடுப்பாட்டம்

(பருத்தித்துறை)

அதிபர் மணியம் கணபதிப்பிள்ளையின் 5 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவ்ரிடம் கல்வி பயின்ற பாடசாலை மாணவர்கள் நடத்தும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நாளை மாலை 2.30 மணிக்கு கணக்கிலாவத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தும்பளை நாவலர் கழகம் மோதவுள்ளது.

என்.கே.தவநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் கலந்துகொள்ளவுள்ளார். (109)

## பிறப்பு பதிவுக்கு ஏற்பாடுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் 12.00 மணிக்கு குழந்தைகளுக்கான பிறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பதிவுக்கு தேசிய அடையாள அட்டை, திருமணப் பதிவு, பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களை எடுத்துச்சென்று இப்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஜெகதாம்பிகை சமேத வேதபுரிஸ்வரர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மகா கும்பாபிஷேகப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேக நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது. இம்மண்டலாபிஷேக காலங்களில் தெய்வீகப் பேருரையினை தெய்வீகப் பேருரையாளர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தி வருகின்றார். (60)

## உற்சவகால கட்டுரைப் போட்டி

நல்லைக்கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். மாநகராட்சி மன்றத்தின் கலாசாரப் பிரிவால் நடத்தப்படவுள்ள கட்டுரைப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிக்ருக்கிறது.


## சிறு விளம்பரம்

### தளபாடம் விற்பனைக்கு

அலுமாரி முதிரை (சாதாரணம்) மற்றும் சோகேஸ் அலுமாரி (சிறியது) ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு - 0772474 740 (R/147)


# நீதிமன்றச் செய்திகள்

## மோட்டார் சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் களவு போயிருந்து எட்டுப் பேரிடம் கைமாறியிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பெண் ஒருவரிடமிருந்து கோப்பாய் பொலிஸாரினால் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த பெண்ணும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் குறித்த பெண்ணை ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியினால் உத்தரவிடப்பட்டதனை அடுத்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அந்த மோட்டார் சைக்கிளை வைத்திருந்த எட்டுப் பேரையும் நேற்று கோப்பாய் பொலிஸார் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவர்களை தலா 40 ஆயிரம் ரூபா இரண்டு ஆட்பிணையில் செல்ல யாழ். நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார். (பா)

❖ ❖ ❖ ❖ ❖

## அனுமதிப் பத்திரம் இல்லாத வாகனச் சாரதிக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காங்கேசன்துறை வீதியில் வசித்து வரும் நபர் ஒருவருக்கு யாழ். பண்ணை வீதியில் வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஆபத்தான் முறையில் வாகனம் செலுத்தியமைக்காக யாழ். நீதவான் நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

யாழ். பொலிஸாரினால் குறித்த நபருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (பா)

❖ ❖ ❖ ❖ ❖

## மதுப்பிரியருக்கு 4000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் மது அருந்தி அப்பகுதிப் பொதுமக்களுக்கு இடையூறு செய்ததற்காக யாழ். நீதவான் நீதிமன்றம் 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரினால் குறித்த நபருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதவான் மா.கணேசராசா குறித்த நபருக்கு 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளார். (பா)

## பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சுமார் 60 அங்கத்தவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். (116)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி - யாழ்ப்பாணம் கடையிற்சுவாமி கோயில் அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று வருகிறது.

21 ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிஷேக நிகழ்வும் அதனைத் தொடர்ந்து ருதுசோபனம், திருக்கல்யாணம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (60)

## சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடத்தும் 90 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் விளையாட்டுப் போட்டியும் நாளை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும், க.றமேஸ்நேசன், இ.இராஜாராம், பொ.மோகன், இ.பாலச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், நா.கணேசன், திருமதி வே.செல்வரத்தினம், எஸ்.குணாளன், எஸ்.சபேசன் சு.நகுலேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (52)


### மலிவு விலையில் முட்டைகள் விற்பனை



மொத்தமாகவும் சில்லறையாகவும் மிக மலிவு விலையில் முட்டைகள் விற்பனையாகிறது.

விலை - 9.50 தொடர்புகளுக்கு - 0773305253

JA விற்பனை முகாமையாளர், யாழ்ப்பாணம்

(R/083)

# வீதி விபத்துக்கள் அதிகரிப்பு 6 மாதங்களில் 14பேர் பலி

## பொலிஸார் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் தொடச்சியாக அதிகரித்துக் காணப்படுவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்த்தில் வீதி விபத்துக்களால் கடந்த வருடம் 12 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் இவ்வருடத்தின் அரையாண்டு பகுதியில் மாத்திரம் 14 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரையாண்டுப்பகுதியிலே அதிகளவான விபத்துக்களால் உயிரிழப்புக்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இவ்வீதி விபத்துக்கள் இடம்பெறுவதற்கு வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதால் வாகனங்கள் வேகத்தை மீறி பயணத்தை மேற்கொள்வதாகும். மேலும் மதுபோதையில் வாகனத்தை செலுத்தி செல்வது வீதி நடைமுறைகளை பின்பற்றாமல் செல்வது போன்ற காரணங்களைக்குறிப்பிடலாம்.

இவ்வாறான காரணங்களாலேயே தற்போது பரவலாக வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் வாகணங்களைக செலுததிசசெல்வோர் கண்மூடித்தனமாக செல்லாமல் ஒழுங்கான முறையில் செல்வார்களானால் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதை ஓரளவு தடுக்கமுடியும்.

மேலும் மது போதையில் வாகனங்களை செலுத்துவோரையும் வீதி நடைமுறைகளை பின்பற்றாது செல்வோர் மீதும் வீதிப்போக்குவரத்து கடமையில் ஈடுபடும் பொலிஸார் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் இந்நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் நூறுக்கு மேற்பட்ட வீதி விபத்துக்கள் அரையாண்டு காலப்பகுதிக்குள் நடைபெற்றிருக்கின்றன. இதில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறறிருக்கின்றார்கள் வாகனங்களும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே பயணத்தை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் உயிரின் மதிப்பை உணர்ந்து வாகனத்தை செலுத்தி செல்ல வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. (கே)

### தரவுகளை பதிய நடவடிக்கை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் கிராம சேவையாளருடன் இணைந்து செயற்படும் வகையில் குடியிருப்பாளர்களின் தரவுகளை மேற்கொள்வதற்காக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. (104)

# இளைஞர் பொலிஸில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர்பகுதியில் மாணவி ஒருவரின் கையைப்பிடித்து இழுத்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

யாழ். ஆரியகுளம் சந்தியில் உள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் கல்வி பயின்றுவிட்டு பருத்தித்துறை' வீதியால் வீடு திரும்பிக்கொணடிருந்த மாணவி ஒருவரின் கையை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவன் பிடித்து இழுத்துள்ளார். இதனை பார்த்தக் கொண்டிருந்த சக மாணவர்கள் அந்த இளைஞரைப் பிடித்து யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்ததனைத் தொடர்ந்தே இவரைப் பொலிஸார் விசாரனைக்குட்படுத்தினர். (பா)

# மரியசேவியர் அடிகளாரின் குருத்துவப் பொன்விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும், இயக்குநருமான அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின் திருப்பொழிவின் 50ஆவது ஆண்டு நிறைவின் பொன்விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.


நாளை காலை முதல் மாலை வரை இடம்பெறவுள்ள குருத்துவப் பொன்விழா நிகழ்வுகளின ஆரம்ப நிகழ்வாக முற்பகல் 10.00 மணிக்கு யாழ். தூய மரியன்னை பேராலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு அதிவந்தனைக குரிய ஆயர் ஜோசப் ஸ்பிற்றறி ஆண்டகை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து மதியம் 12.00 மணிக்கு, திருமறைக் கலாமன்றத்தால் இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைககப்படவுள்ள ஓவியக் கண்காட்யகத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இடம்பெறும். இதன் போது கொழும்பு பல்கலைக் கழக வேந்தரும், முன்னாள் கொழும்பு மறைமாவட்ட ஆயருமான பேரருள்திரு ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் அடிக்கல்லினை நாட்டிவைப்பார்.

மாலை 3.00 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம் பெறும். கௌரவிப்பு, நூல் வெளியீடு நிகழ்வில் முதல் நிகழ்வாக கௌரவிப்பு நிகழ்வு இடம் பெறும். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடை பெறும் நிகழ்வில் மரியசேவியர் அடிகளாருடன் இணைந்து குருத்துவப் பொன்விழா நிறைவைக் காணும் திருமலை-மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும், மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர் அருள் திரு. சேவியர் குருஸ் அடிகளாரும் கௌரவிக்கப்படுவார்கள். கௌரவிப்பு உரைகளை போராசிரியர் ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை, மன்னார் மறைமா வட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, நல்லை ஆதீனக் குரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந் தர பராமச்சார்ய சுவாமிகள், வண தம்மகீர்த்தி தேரோ, டாக்டர் ஜின்னா ஷெரிபுதீன் ஆகியோர் வழங்குவார்கள்.

கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து மரியசேவியர் அடிகளின் குருத்துவப் பொன்விழா நினைவு நூலின் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலை நிகழ்ச்சிகள் மாலை 06.30 மணிக்கு இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறும். இதில் யாழ்ப்பாணம் மற்றும் தென்னிலங்கை திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் நடனங்கள், நாடகம் உட்பட பல நிகழ்வுகள் நடைபெறும். மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக இலங்கைக்கான வத்திக்கான் தூதுவரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் பதில் தூதர் ஜி. எஸ்.மார்வா, யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். நீதிவான் மா. கணேசராஜா, யாழ்.மாவட்ட நீதிவான் எ.எ. ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (52)



கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்திய முன்னாள் அரச அதிபர் அமரர் க.பொன்னம்பலம் நினைவுக் கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி சென் திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் நினைவுரையாற்றுவதையும், கருத்தரங்கில் கட்டுரைகள் வாசித்த பேராளர்கள் மற்றும் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் நிற்பதையும் காணலாம்.

# நீண்டகாலமாக திருத்தப்படாத சரசாலை-மட்டுவில் வீதி

(சாவகச்சேரி)

சரசாலை மத்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாதிருப்பதால் இவ்வீதியூடாக போக்குவரத்து பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சலசம்புளியடி சரசாலை வீதி பல.நோ.கூட்டுறவு சங்க கிளைகது முன்னால் ஆரம்பமாகி சரசாலை மத்தியிலிருந்து மட்டுவில் வடக்கு கமலாசினி வித்தியாலயத்திற்கு அருகால் செல்லும் வீதியே நீண்டகாலமாக திருத்தப்படாமல குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இந்த நிலையில் இவ்வீதியால் நாளாந்தம் அதிகளாவான மக்களும் மற்றும் பாடசாலை மாணவர்களும் பயணத்தை மேற்கொள்ளும் நிலையில் திருத்தப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ் வீதியை புனரமைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இனியாவது இவ்வீதியைப் புனரமைக்க சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுப் பார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (11)

# 82 இலட்சம் ரூபா செலவில் கம்பாவத்தை வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகமான புலோலி பிரதேச சபையின் கீழ் உள்ள கம்பாவத்தை வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

30 வருடங்களாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்பட்ட இவ்வீதி 82 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

முன்னர் இவ்வீதி புனரமைக்கப்படாத நிலையில் இவ்வீதியூடாக பயணத்தை மேற்கொள்ளவோர் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் தற்போது இவ்வீதி புனரமைக்கப்பட்டமையால் இலகுவான போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். (109)

# பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவுதினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மயிலணி சைவ மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுணர் நினைவு நாளும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை வரிசைப்புலம் முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக உடுவில் பொது நூலக பிரதம நூலகர் க.சௌர்ந்தரராஜன், சுன்னாகம் வாழ்வக தலைவர் ஆ.இரவிந்திரன் கௌரவ விருந்தினர்களாக பரமேஸ்வரி சிதம்பரநாதன், சரோஜினி குலேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

☆ ☆ ☆

நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு பாடசாலை அதிபர் சி.தர்மரததினம தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் பொறியியலாளருமான பொ.பிரபாகரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விப் கோட்ட பணிப்பாளர் பாலசுப்பிரமணியம், யாழ்ப்பாண வலய ஆரம்பக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர். பூ.குகதாசன், கௌரவ விருந்தினராக புலம் பெயர் வாழ் பழைய மாணவர் செ.கருணாகரன் ஆகியோரும், கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசில் வழங்கலைத் தொடர்ந்து மாணவர்களின் விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (03)

# மந்த கதியில் இடம்பெறும் கட்டட பூச்சு வேலைகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொதுச் சந்தை கட்டடட்த்தின் மேல்மாடி வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் பூச்சுவேலைகள் மந்த கதியில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தைக்கட்டடம் இவ்வருடத்தின் தை மாதப் பகுதியில் திறந்து வைக்கப்படவிருந்தது. எனினும் வேலைகள் பூர்த்தியடையாமல் தொடர்ந்து இழுபறி நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மந்த கதியில் வேலைகள் இடம்பெறுவதால் சந்தை வியாபாரங்கள் மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (109)

# சொற்பொழிவு

(வடமராட்சி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம் பெற்றுவருகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "மானிட வாழ்வும் மகோற்சவமும்" என்னும் விடயம் பற்றி பிரமச்சாரி யாக்கிரத சைதன்யா சுவாமிகள் சொற்பொழிவாற்றவுள்ளார். (116)

நல்லவனுக்கு நலம் நடக்கும் என மட்டும் நம்பாது வல்லவனாயும் வாழ்ந்துவிடு பாப்பா - பாரதியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, தொலைநகல் : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## தன்னையறிந்திடில் தனக்கொரு கேடில்லை

மனிதர்கள் எல்லோர்க்கும் கனவுகள் உண்டு. அடிப்படைத் தேவைகள் கூட இங்கு பலருக்கு கனவாகவே இருக்கிறது. உண்ண உணவு, உடுக்க உடை, தங்க இடம்... இவற்றோடு வலியவர்களாலும் வெற்று வாய்சாலகர்களாலும் பறிக்கப்படாத நிம்மதியான ஓர் எளிய வாழ்க்கை. இதுவே கனவு! துண்டு நிலம், அதில் ஒரு குடில், அருகே பாயும் ஆறு, அதன்மேல் நிலவு, அதை ரசிக்கும் நிம்மதி... எல்லோருக்கும்தானே வேண்டும்?

நம்மை நாமே குறுக்கிக் கொண்டும், பிளவுபடுத்திக் கொண்டும் அழிந்துகொண்டிருப்பதையே விரும்புவது ரசிப்பது எல்லாம் எவ்வளவு அவலமான மனநிலை! குற்றச் செயல்கள் அதிகரிப்பதில் ஊடகங்களுக்கென்ன அவ்வளவு குதூகலம்? யாழ்ப்பாணத்தில் நிலைமை சீர்கெட்டுப் போகிறது என்றும், திருட்டும் கொள்ளையும் போதைவஸ்துப் பாவனையும் விபச்சாரமும் இன்னுமின்னும் குற்றங்களும் கலாசாரச் சீரழிவும் பற்றிப் புலம்புவதன் மூலம் யாரையோ குற்றம் சாட்டுவதாக இவர்கள் நினைக கிறார்கள்.

ஆனால், இந்தக் கலாசார சீரழிவு, பொருளாதார பின்னடைவு, சொத்திழப்பு, மன உளைச்சல், உறுப்புக்களை – கணவர்மாரை – பிள்ளைகளை – பெற்றோரை இழந்த பரிதவிப்பு என்று எல்லாவற்றுக்கும் வேறு யாரோ மட்டும்தான் காரணமா? இவற்றுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தமிழ்த் தரப்பில் யாருமில்லையா?

இந்த இன்றைய நிலைமை உருவாகுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு சிறு முனகல் குரலாவது இவர்கள் எழுப்பியதுண்டா? இப்போதும், மக்களது அவலங்களைப் புரிந்துகொண்டு பேசுவதாகவா இவர்களது பேச்சு இருக்கிறது? தின்று கொழுப்பூறிய சவால்களுடனல்லவா பகைநச்சுச் சூழலை வளர்த்தெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்!

இவர்களது தீமையும் கொடுமையுமான பாதைகளில் சிக்குண்டு, ஏமாற்றுக்கும் வஞ்சனைக்கும் ஒத்துழைப்பதினால் மேலும் மேலும் எமது மக்கள் சிதைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே உண்மை! நடைபெற்றுக் கொண்டிருக்கிற தீமைகள், அவலங்கள் எல்லாம் நிலைப்பதிலும் வளர்வதிலும் இவர்கள் யாருக்கும் பங்கில்லையா? நம்மை வாழவிடாமலடிக்கிற வறட்டுப் பெருமிதத் தளைகளிலிருந்து இவர்கள் விடுபடாமல், தமிழ் மக்களுக்கு இவர்களிடமிருந்து விமோசனமில்லை.

பகையுணர்ச்சியும் வன்மமும் வறட்டு ரோசங்களும் நம் வாழ்வை அழிப்பதைத் தெரிந்து கொள்வோம். மேதைமை மிக்க திரைப்பட இயக்குனரான அகிரா குரோசாவா தன் படங்களைப் பற்றிச் சொல்லுகையில்: "உலகெங்கிலும் மக்கள் தாமே தமக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவதற்கு முனைவதாகவே தோன்றுகிறது. இப்பொழுதை விட இன்புற்றிருப்பதற்கு மனிதனுக்கு உரிமை உண்டு. அச் செய்தியைத்தான் நான் உணர்த்த முயன்றிருக்கிறேன்." என்று சொன்னார்.

மக்கள் இன்புற்றிருக்கும் அந்த உரிமையைத் தடுத்துக் கொணடிருப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தத்தம் மனதில் புதைந்துள்ள துவேசத்தையும் வன்முறையையும் உணர்ந்து அதை விலக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபடாதவர்களுக்கு, தமக்குள் மறைந்து கிடக்கும் துவேசத்தை தம்மால் அறிய முடியாமல் போகும். நம் துன்பங்களுக்கான பழியை எப்போதும் மற்றவர்களின் மீதே போட்டுக் கொண்டு மீளமுடியாமல் மறுகுவதாக இருக்கும்.

இப்போதாவது நாம் சிந்திக்க வேண்டும். மக்களுக்குத் துன்பங்களையே தொடர்ந்து சுமையாக ஏற்றிக் கொண்டிருக்கும் கோஷங்களை நிறுத்த வேண்டும். - ஆசிரியர்

# செய்தி இணையத்தளங்களை பதிவு செய்ய அங்கீகாரம்

(கொழும்பு)

புதிதாக இணையத்தளமொன்றை பதிவு செய்யும் கட்டணமாக ஒருலட்சம் ரூபாவும் அதனைப் புதுப்பிப்பதற்கான கட்டணமாக 50 ஆயிரம் ரூபாவும் அறவிடும் வகையில் பத்திரிகை கவுன்ஸில் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

ஊடக ஒழுக்கக்கோவையினைப் பாதுகாத்து, செய்தி இணையத்தளங்களினூடாக வெளியிடப்படும் ஆபாசம் மற்றும் தனிநபர் விமர்சனம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் மேற்படி பத்திரிகைக் கவுன்ஸில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதன்படி, இலங்கை பத்திரிகைகவுன்ஸிலின் 1973ஆம் ஆண்டு 5 ஆம் இலக்கச் சட்டம் திருத்தப்பட்டுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்ற அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் மேற்படி சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு, அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல,

மேற்படி பத்திரிகை கவுன்ஸில் திருத்தச் சட்டத்தின் கீழ் தற்போது நடைமுறையில் உள்ள இணையத்தளங்களும் உள்ளடக்கப்படும். இவ்விணையத் தளங்களும் தங்களது பதிவுக் கட்டணத்தை செலுத்த வேண்டி ஏற்படும்.

செய்தி இணையத்தளங்கள் மூலம் வலையமைப்பினூடாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ எவ்வித தவறுகளும் ஏற்படக் கூடாது என்ற அடிப்படையிலேயே இந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இதனால், பொறுப்புவாய்ந்த முறையில் செயற்படும் இணையத்தளங்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. அவர்கள் ஏற்கனவே பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு வருவதால் இந்த சட்டம் அவர்களைப் பாதிகாது. இருப்பினும் கட்டண விடயத்தில் அவர்கள் பாதிக்கப்படவுள்ளதால் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து இயங்கும் இணையத்தளங்கள் தொடர்பில் சில கட்டுப்பாடுகளை விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## தேர்தல் இடம்பெறும் பகுதிகளில் நிவாரணங்களை வழங்கக்கூடாது

மாகாண சபை தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல்கள் இடம்பெறவுள்ள பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு நிவாரணங்கள் உள்ளிட்ட எதனையும் வழங்கக்கூடாது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். இவ்வாறு வழங்கப்படும் பட்சத்தில், அது தேர்தல் சட்ட திட்டங்களை மீறுவதாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை வடமத்திய மாகாணம் உள்ளிட்ட மாகாணங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் எதிர்வரும் வாரம் முதல் வழங்கப்படும் என விவசாயத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் இந்த நிவாரண கொடுப்பனவுகள் அரசியல் நோக்கத்துக்காக வழங்கப்படுவதாக முறைப்பாடு முன்வைக்கப்பட்டால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## முதலாவது மின்சார ரயில்சேவை இலங்கையில் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது மின்சார ரயில் சேவையினை மேற்கொள்ளும் திட்டம் இறுதிவடிவத்திற்கு வந்துள்ளதாக இலங்கை புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது. முதற்கட்டமாக வியாங்கொடையிலிருந்து களுத்துறை வரைக்கும் மின்சார ரயில் சேவையினை ஆரம்பித்து இயக்கவுள்ளதாக இலங்கைப் புகையிரதத் திணைக்கள திட்டப் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக இரண்டு மின்சார உப நிலையங்களை றாகம மற்றும் பாணந்துறையில் நிர்மாணிக்கவும் திட்டமிட்டுள்ளது மேலும் இலங்கை மின்சார சபை மற்றும் போக்குவரத்து அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் சொகுசு மின்சார ரயில் சேவையினை மேற்கொள்ளவும் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விவசாயத் திணைக்களத்தினால் மாணவரிடையே சித்திரப்போட்டி

(அச்சுவேலி)

விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே கமமும் . கமத்தொழிலும் என்னும் தொனிப் பொருளில் சித்திரப் போட்டியினை நடாத்தும் வகையில் அதற்கான ஆக்கங்கள் கண்ணொறுவ உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள அனைத்து அரச, தனியார், சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவ, மாணவிகள் இப்போட்டியில் பங்குபற்றுவதுடன் தமது ஆக்கங்களைப் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் போட்டிக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

தரம் 1 முதல் 13 வரையான மாணவர்களுக்கு நடாத்தப்படும் இப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெறும் மாணவர்களுக்கு தலா 5000 ரூபா வீதமும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர்களுக்கு தலா 3000 ரூபா வீதமும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர்களுக்கு தலா 2000 ரூபா வீதமும் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. 03)

# பொன்னான விளைச்சல் விவசாயப் பண்ணைப்போட்டி

(அச்சுவேலி)

மஹிந்த சிந்தனைக் கொள்கைப் பிரகடனத்துக்கமைய நடைமுறைப்படுத்தும் தேசிய விவசாய வேலைத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் மாணவ சக்தியுடன் பொன்னான விளைச்சல் என்னும் தொனிப் பொருளில் பாடசாலைகளுக்கிடையிலான விவசாயப் பண்ணைப் போட்டிகள் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையிலுள்ள பத்தாயிரம் வரையிலான பாடசாலைகளிலுள்ள பயிர்செய்தகு நிலப் பரப்பில் வினைத்திறன்மிக்க வகையில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவும் இதனூடாக நம்நாட்டு மாணவர்களை விவசாயப் பொருளாதார நடவடிக்கையில் பங்களிப்பை மேற்கொள்ளச் செய்யவும், கவர்ச்சியானதும் தரமானதுமான பாடசாலை விவசாயப் பண்ணைகளை நிறுவுதலையும் நோக்காகக் கொண்டு இப் பாடசாலை விவசாயப் பண்ணைப் போட்டிநடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான போட்டிகளை பாடசாலைகளில் நடாத்துவதன் மூலம் மாணவர்கள் ஓய்வு நேரததை பயன்மிக்கதாகக் கழிக்கப் பழகுவதற்கும், உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளவும், பாடசாலையில் பெறும் அறிவை வீட்டில் கையாண்டு பார்ப்பதன் மூலம் பொருளாதார அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ளவும், வாய்ப்புக்கள் ஏற்படும் எனவும் கருதப்படுவதனால் இதன் வலய மட்ட, மாகாணமட்டப் போட்டிகளின் மதிப்பீடுகள் நிறைவடைந்ததும், தேசிய மட்டத்திலான மதிப்பீடுகள் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெற இருப்பதுடன் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கு தேசிய மட்டச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப் போட்டிகள் தொடர்பான வரையறைகள், நியதிகள் தொடர்பான விடயங்கள் அடங்கிய சுற்று நிருபம் ஏற்கனவே அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (03)

# த.தே.கூட்டமைப்பின் நோக்கம் ஆட்சியை மாற்றுவதேயொழிய தீர்வை ஏற்படுத்துவதல்ல



**அரசாங்கம் அமைக்கவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற மறுப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தள்ளிப் போடுவதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிகழ்ச்சித் திட்டம். இனப்பிரச்சினைத் தீர்வைவிட, ஏகாதிபத்திய நலன்களுக்கான ஆட்சி மாற்றம் ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடனும் கூட கூட்டுச் சேர்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தயாராக உள்ளது.**

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மூன்றாண்டுகள் கழிந்துவிட்ட போதிலும், அப்போர் உருவானதிற்கு மூல காரணமாக அமைந்த இனப்பிரச்சினைக்கு இன்னமும் ஒரு தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. அதற்கான காரணத்தைத் தேடுபவர்கள் அரசாங்கத்தின் மீது மட்டுமே விரலை நீட்டுகின்றனர்.

சாதாரண மக்கள் அவ்வாறு அரசாங்கத்தைக் குறைகூறுவதில் சில நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஏனெனில் அரசு பல்லாயிரக் கணக்கான உயிர்களை விலையாகக் கொடுத்து இந்த கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த போது, மக்களுக்குச் சொல்ல முடியாத இழப்புகள் ஏற்பட்ட போதும், யுத்தம் முடிவுக்கு வந்தால் நிம்மதியான ஒரு வாழ்க்கை கிடைப்பதுடன், இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வும் கிடைக்கும் என மக்கள் நம்பினர். அரசாங்கமும் அவ்வாறான ஒரு நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி வந்தது.

அதாவது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது சிரேஸ்ட அமைச்சர்களும் கூறி வந்தனர். ஆனால் இதுவரை அந்தத் திசையில் அரசாங்கம் ஒரு சிறு நகர்வைத்தன்னும் மேற்கொள்ளாததால் மக்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்துள்ளமை இயல்பே.

இந்த விடயத்தில் அரசாங்கம் சிங்களப் பேரினவாத அடிப்படையில்செயல்பட்டு தமிழரை ஒடுக்க முயல்வதாலேயே, இனப்பிரச்சினைத் தீர்வை இழுத்தடித்து வருகிறது எனத் தமிழர் தரப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன. ஆனால் அரசாங்கம் இதைத் திட்ட வட்டமாக மறுப்பதுடன், பாராளுமன்றத்தெரிவுக் குழு ஒன்றின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன் வரும்படி பிரதான தமிழ் அமைப்பான தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு திரும்பத் திரும்ப அழைப்புவிடுத்து வருகிறது. முதலில் அந்த அழைப்பை ஏற்கப் பிடிவாதமாக மறுத்த தமிழ் கூட்டமைப்பு, பின்னர் தனது நிலைப்பாட்டில் ஒரு நெகிழ்வைக்காட்டுவது போலப் பாசாங்கு செய்தது. அதன் பின்னர் "மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை"யாகப் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது.

உண்மையில் இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கம் இதயசுத்தியுடன் உள்ளதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு தமிழ் கூட்டமைப்புக்கு ஒரு அருமையான வாய்ப்பாக இருந்தது. ஏனெனில் அமையவிருந்த தெரிவுக் குழுவில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கும். அதன்படி பார்த்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமின்றி, அரசாங்கத்தில் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ், தேசிய முஸ்லீம் காங்கிரஸ், மற்றும் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி போன்ற கட்சிகளும் நியாயமானதொரு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நின்றிருப்பார்கள்.

அதுமாத்திரமின்றி, பிரதான அரசாங்கக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், போலியான முறையில் தமிழர் ஆதரவு காட்டிவரும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட ஏதாவது ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டியிருந்திருக்கும். இந்த நிலைமையில் அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு சர்வசதா சிங்கள இனவாதம் பேசிவரும் ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி என்பனவும், வெளியே இருந்துகொண்டு இனவாதம் பேசிவரும் ஜே.வி.பி, சரத் பொன்சேகா போன்றோரும்தான் ஒரு சிறுபான்மையினராக தீர்வு முயற்சிகளை எதிர்ப்பார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையிலேயே தமிழ் மக்கள் பிரச்சினை தீர்வதில் அக்கறை இருக்குமாக இருந்தால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றி, அங்கு இனப்பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காண்பதில் அக்கறையுள்ள கட்சிகளுடன் ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்கி, தீர்வு முயற்சிகளுக்கான புதிய கதவுகளைத் திறந்திருக்கவேண்டும். அப்படிச் செய்தால் அது தமிழ் கூட்டமைப்பின் இதயசுத்தியைஎடுத்துக் காட்டுவதுடன், அரசியல் சாணக்கியம் மிகுந்ததாகவும் இருந்திருக்கும். ஆனால் கூட்டமைப்பு அப்படிச் செய்யவில்லை. செய்ய விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

உண்மையில் கூட்டமைப்பு எதை விரும்புகிறது? அது தன்னுடன் மட்டும் அரசாங்கம் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என விரும்புகிறது. அதன் மூலம் ஒரேநேரத்தில் பல இலக்குகளை அடைய அது முற்படுகிறது. தமிழ் - முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இதர கட்சிகளுடன் பேசாமல் தன்னுடன் மட்டும் பேச வைப்பதன் மூலம், தமிழ் பேசும் மக்களின் எகப்பிரதிநிதிகள் தாங்கள்தான் என்ற புலிகளின் ஜனநாயக மறுப்பு எதேச்சாதிகார நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். இது கூட்டமைப்பின் ஒரு இலக்கு.

அத்தோடு இதர கட்சிகளின் பங்களிப்பு இல்லாமல் அரசாங்கமும் தமிழ் கூட்டமைப்பும் மட்டும் பேசி ஒரு தீர்வு எட்டப்பட்டால், அதை ஏனைய கட்சிகள்-குறிப்பாக சிங்கள இனவாதக் கட்சிகள் - குழப்பியடிக்கும் என்பது கூட்டமைப்பின் இன்னொரு எதிர்பார்ப்பு. அப்படி எதுவும் நடக்காமல் (நடக்காமல் விடுவதற்குச் சாத்தியமில்லை) பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் அதற்கான முழு உரிமையையும் புகழையும் தனதாக்கிக் கொள்ளலாம் என்ற அது அல்லது இது என்ற கபட நோக்கம் இன்னொரு திட்டம்.

அடுத்த இலக்கு பிச்சைக்காரன் தனது புண்ணை மாற்றாமல் வைத்து அதைக் காட்டியே வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுப்பது போல, இனப்பிரச்சினைத் தீர்வு எதுவும் எட்டப்பட விடாமல் இழுத்தடித்து அல்லது குழப்பியடித்து தொடர்ந்து அதில் அரசியல் குளிர்காய்வது. அவ்வாறான ஒருநிலை இருந்தால் இலங்கையில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள்,ஒடுக்குமுறைக்குள்ளாகிறார்கள் என சர்வதேச அரங்கில் ஒப்பாரி வைத்து அனுதாபம் தேட வசதியாக இருக்கும்.

இந்த யுக்தியையே கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக எல்லாப் பிரதான தமிழ்த் தலைமைகளும் செய்து வந்திருக்கின்றன. இப்பொழுது அதற்கான தேவை மேலும் அதிகரித்துள்ளது. புலிகள் வேகமாகவும் பலமாகவும் உருவாகி படிப்படியாக அழிந்து போன பின்னர்,புலம்பெயர் நாடுகளில் வாழும் புலி மாபியாக்களே, அந்த இயக்கத்தின் மிச்சசொச்ச நினைவுகளைப் பாதுகாத்து வருகிறார்கள். அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன காரணம் கொண்டும் அரசாங்கத்துடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய போக்குகளில் அவர்களது சட்டாம் பிள்ளைத்தனம் மிகவும் கனதியாக இருப்பதும் ஒரு காரணமாகும்.

எல்லாவற்றுக்கும் புலிகளின் உருவாக்கத்திலும் அவர்களின் வளர்ச்சியிலும் உள்நோக்கத்துடன் கூடிய மிகப் பெரிய பங்கு வகித்த சில ஏகாதிபத்திய சக்திகள், அவர்களது எதிர்பாராத அழிவுக்குப் பின்னர்,இலங்கைஅரசைப் பழிவாங்குவதிலும், தமக்குப் பிடிக்காத தற்போதைய இலங்கை அரசை மாற்றித் தமக்கு ஏதுவான ஒரு அரசை அங்கு உருவாக்குவதிலும் திட்டமிட்ட வகையில் செயல்பட்டு வருகின்றனர். அதற்காக அவர்கள் எப்பொழுதுமே தமக்கு நம்பிக்கையான ஐ.தே.க தலைமையில் அரசுக்கு எதிரான சக்திகள் அனைத்தையும் திரட்டி வருகின்றனர். அந்த அணியில் தீவிர வலதுசாரிக் கட்சியான ஐ.தே.கவிலிருந்து-தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி, சரத் பொன்சேகா, மனோ கணேசன் உள்பட-தீவிர இடதுசாரித்தனம் பேசும் விக்கிரமபாகு கருணாரத்தினவின் சிறு குழுவரை அனைவரையும் அணி திரட்டி வருகின்றனர். அதன் வெளிப்பாடே இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் ஐ.தே.க-தமிழ் கூட்டமைப்பின் "கூட்டுக் கலியாண"மேதினக் கூட்டம்.

இதுதான் தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான நிலவரம். அதாவது அரசாங்கம் அமைக்கவுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற மறுப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தள்ளிப்போடுவதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிகழ்ச்சித் திட்டம். இனப்பிரச்சினைத் தீர்வைவிட, ஏகாதிபத்திய நலன்களுக்கான ஆட்சி மாற்றம் ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடனும் கூட கூட்டுச்சேர்வதற்கு தமிழ்தேசியக் கூட்டமைப்புத் தயாராக உள்ளது.

1957இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், 1990இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், 2000இல் சந்திரிகா முன்வைத்த தீர்வுத் திட்டத்தையும் குழப்புவதற்கு அப்போதைய தமிழ்த் தலைமைகள் எப்படி ஐ.தே.கவுக்குஒத்துழைத்தனவோ, அதுபோலவே தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் நடந்து கொள்கிறது. அதற்கு ஒரு உதாரணம், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது போர் வெறியனும் சிங்களப் பேரினவாதியுமான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகவை கூட்டமைப்பு வெளிப்படையாக ஆதரித்தமை. சமீபத்திய உதாரணம், உதைத்த காலை நக்குவது போல பேரினவாத ஐ.தே.கவுடன் இணைந்து தமிழர்களின் "தாயக பூமி"யான யாழ்ப்பாணத்தில் ஒன்றாக மேதினக் கூட்டம் நடாத்தியமை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கபட நோக்கங்களையும், புலம்பெயர் புலிகளின் சதித் திட்டங்களையும் புரிந்து கொண்டபடியால்தான், அவர்களுக்கு உதவும் முகமாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு வராவிட்டால்தானும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறப்போவதில்லை என ஐ.தே.க சமீபத்தில் அறிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இன்றைய அரசாங்கம் மெத்தனப் போக்கையும், தேவையற்ற கால தாமதத்தையும் செய்கின்றது என்ற நியாயமான குற்றச்சாட்டை நாம் நேர்மையுடன் ஏற்றுக் கொள்கின்ற அதே வேளையில், ஏகாதிபத்திய சக்திகளின் பின்னணியில் ஐ.தே.க தலைமையுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வைக் குழப்புவதில் வகித்து வரும் பங்கு பாத்திரத்தைக் காணத் தவறுவோமாயின், இருட்டினில் கறுப்புப் பூனையைத் தேடும் குருடராகத்தான் இருப்போம்.

**- நன்றி: வானவில்**

## மத்திய நிலையமாக இலங்கை



(கொழும்பு)

இனங் காணப்பட்ட வெளிநாடுகள் சிலவற்றில் இருந்து இலங்கை வருபவர்கள் தொடர்பாக விஷேட விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த தகவலை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தை மேற்கோள் காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் செய்தியாக வெளியிட்டுள்ளது.

அகதிகளை இடமாற்றம் செய்யும் மத்திய நிலையமாக இலங்கையை சில வெளிநாட்டவர்கள் பயன்படுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து இலங்கைக்கு வருகை தருபவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யுத்த வெற்றிப் பகிர்வு 63 நாடுகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் யுத்த வெற்றி அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் "இராணுவ கருத்தரங்கு 2012" எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. "நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை நோக்கி" எனும் தொனிப்பொருளில் இவ் வருடம் இந்த கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக 63 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் பெரும்பாலான நாடுகள் தங்களது பங்குபற்றலை உறுதி செய்துள்ளன என்று இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமாகவுள்ள இந்த மாநாடு, தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தறபோது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இராணுவ தளபதி குறிப்பிட்டார்.


யுத்தம் முடிவுக்கு கொண்டுவரபட்டு இரண்டு வருட பூர்த்தியல் முதலாவது கருத்தரங்கு கடந்த வருடம் நடத்தப்பட்ட நிலையில் அதன்போது யுத்தத்தின் போதான படைத்தரப்பினரின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இருப்பினும் இம்முறை புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள் ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் என்ற அடிப் படைகளில் இந்த மூன்று நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அத்துடன், யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கில் அரசாங்கத்துடன் இணைந்து படையினர் முன்னெடுக்கும் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்தி இலங்கைக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்களை இல்லாதொழித்தல் மற்றும் நாட்டின வெளிப்படைத் தன்மையை சர்வதேசத்துக்கு விளக்குதல் போன்றனவும் இந்த கருத்தரங்கின் போது முன்னெடுக்கப் படவுள்ளன.

இதன்போது, அரசாங்க அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள், பாதுகாப்பு மற்றும் அரசாங்கத்தின் உயரதிகாரிகள் உள்ளிட்ட சர்வதேச முக்கியஸ்தர்களும் விரிவுரைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்று இராணுவ தளபதி மேலும் கூறினார்.

## வெள்ளத்தடுப்பு அணைக்கட்டு



(கொழும்பு)

மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் நுழைவாயிலான கோட்டைமுனைப்பால நுழைவாயிலுக்கான வெள்ளத்தடுப்பு அணைக்கட்டுக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் கே.தர்மரத்தினம் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் அனுசரணையுடன் 40 இலட்சம் ரூபா செலவில் கோட்டைமுனைப்பால நுழைவாயிலுக்கான வெள்ளத்தடுப்பு அணைக் கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார்.

பருவகால மழை ஆரம்பித்ததும் இப்பாலத்தின் கரையோரப் பகுதிகளில் மண்ணரிப்பு ஏற்படுவதாகவும் இதன் காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து வெள்ளம் நகருக்குள் உட்செல்வதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவந்தனர்.

# மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதை ஏற்க முடியாது

(கொழும்பு)




உயர்தர மாணவர்களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை ஆசிரிய சேவை ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் உயர்தர மாணவர்களுக்கு ரன்டம்பே இராணுவ முகாமில் பயிற்சி. ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் உயர்தர மாணவர்களுக்கு இராணுவ பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன விளக்க வேண்டுமென ஆசிரிய சேவை ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கெடட் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு மட்டுமே கடந்தகாலங்களில் இராணுவ பயிற்சி அளிக்கப் பட்டதாகவும், சாதாரண, உயர்தர மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கபடவில்லை எனவும் தெரிவித்துள்ளது. கல்வி அமைச்சர் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளை மீறிச் செயற்பட்டுவருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

(கொழும்பு)



தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றும் உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட பாதுகாப்பு செயற்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இன்று கூறினார்.

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன்படி ஆயுதமேந்திய பொலிஸ் அல்லது இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவரும் நுளம்பு ஒழிப்பு தொடர்பான களப்பணி மற்றும் சோதனைகளில் ஈடுபடும் குழுவில் இடம்பெறுவர் எனவும் இன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கூறினார்.

இத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இராணுவ உத்தியோகத்தர்களும் இதில் பங்குபற்றுகின்ற போதிலும் அவர்கள் ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை. அண்மையில் பொதுச்சுகாதார உத்தியோகததர் ஒருவர் கொலலப்பட் சம்பவத்தை கருத்திற்கொள்கையில் ஆயுத மேந்திய பாதுகாப்பு உத்தியோகத்தரை இக் குழுக்களில் இணைப்பது அவசியம் என தீர்மானித்துள்ளோம் என அவர் கூறினார்.

## விரிவுரையாளர்கள் போராட்டம் மாணவர்களே பாதிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக் விரிவுரையாளர்கள் போராட்டம் காரணமாக மாணவர்களே பாதிக்கப்பட்டுள்ளதாக அனைத்து பல்கலைகழக மாணவர் நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த நிலையத்தின் ஊடக செயலாளர் மஹமூத் மாஜித் இதனை குறிப்பிட்டுள்ளார். எனவே இதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் ஆரம்பித்துள்ள பகிஸ்கரிப்பு போராட்டம் தொடர்ந்தும் முன் எடுக்கப்படு கின்றது.

இந்த போராட்டத்திற்கு, களனி பல்கலைகழக விரிவுரையாளர்களும் தமது ஆதரவினை வெளியிட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் இந்த பல்கலைகழக விரிவுரையாளர்கள் சிலர் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வழிபாட்டிடங்கள் மீதான தாக்குதல் பாப்பரசருக்கு கடிதம் அனுப்பி வைப்பு



(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்கள் மற்றும் அவர்களது வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய கடிதமொன்று பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டு சர்வமதத் தலைவர்கள் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதாக தெரிவித்து தமிழ்நாட்டிலுள்ள இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கையின் சிறுபான்மை மக்கள் மற்றும் அவர்களது வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் சென்னையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது தமிழக ஆயர் பேரவையின் தலைவர் ஏ.எம்.சின்னப்பா இதனைத் தெரிவித்துள்ளதாக பி.பி.சி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

வரட்சி காரணமாக பாதிப்புக்குள்ளான பயிர்ச செய்கையாளர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் எஸ் எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இந்தநிலையில், வரட்சி காரணமாக பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கான நிவாரணங்கள் அடுத்த வாரம் முதல் வழங்கப் படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சந்தேக நபர்களை ஆஜர்படுத்துவதால் டெங்கை ஒழித்துவிட முடியாது



(கொழும்பு)

நுளம்பு. வளர்வதற்கு ஏதுவாக சூழலை வைத்திருந்தமைக்காக சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு பதிலாக, உரிய பலனை பெறுவதற்கு அப்பகுதிகளில் புகை அடிக்க வேண்டும் என கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன டி அல்விஸ் கூறினார்.

தமது குடியிருப்பு பகுதிகளை டெங்கு நுளம்பு பரவும் விதமாக வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட 5 நபர்களை முல்லேரியா பொலிஸார் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் இவ்வாறு கூறினார்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி அபராதம் விதிப்பதால் நீதிமன்றத்திற்கு பணம் கிடைக்கும். ஆனால் டெங்கை ஒழிப்பதற்கு இது மாத்திரம் போதாது என நீதவான் கூறினார்.

புகையடித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலமே டெங்கை ஒழிக்க முடியும் என அவர் கூறினார்.

குற்றம்சுமத்தப்பட்ட ஐவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களுக்கு தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# பீடை நாசினி விற்பனையாளர்களுக்கு தொழில் வினைத்திறன் அவசியம்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளுக்கு பீடைநாசினிகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்களிடம் விவசாய இரசாயன விற்பனை நிலையங்களை ஒழுங்குபடுத்தல், விவசாயிகள் விவசாயத்துக்கான இரசாயனங்களை வினைத்திறன்களுக்கு ஏற்ப பயன்படுத்துகின்றார்களா என்பவற்றை பரிசோதிப்பது போன்ற செயற்பாடுகள் அவசியம் இருத்தல் வேண்டும் என யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

விவசாய இரசாயன பீடை, கொல்லி மருந்துகளை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் விவசாய இரசாயன மருந்துகளை கையாண்டு வருகின்ற கமத்தொழில் விரிவாக்க நிலையங்களில் கடமை யாற்றி வருகின்ற உத்தியோகத் தர்கள் ஆகியோர்களுக்கிடை யிலான நேர் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இதில் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த 1980 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க பீடைநாசினி சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க பீடைநாசினி திருத்தச் சட்டம் ஆகியவற்றினை அமுல்ப் படுத்தும் முகமாக மேற்படி செயற்பாடுகள் விற்பனையாளர்களிடம் இருக்க வேண்டியது அவசியமானது எனத்தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்தில் பீடை நாசினி சட்டம் நடைமுறைப் படுத்தல் பீடைநாசினிகளை பாதுகாப்பாக கையாளுதல் பற்றிய பயிற்சியும் வழங்கப் பட்டதுடன் விவசாய இரசாயன விற்பனை நிலையங்களுக்கு பயிற்றப்பட்ட உதவியாளர்களை நியமித்தல் தொடர்பான நடவடிக்கை பற்றியும் விற்பனையாளரகளுடன் கலந்துரையாடப்பட்டது

மேலும் இரசாயன மருந்துகள் பற்றிய விளக்கங்களையும், பயிற்சிகளையும் வழங்குவதற்கென உதவியாளர்களை தெரிவு செய்து தருமாறும் அவ்வாறு தெரிவுசெய்து தருவதற்கான உதவியாளர்களது சுய விருப்பங்களை பதிவதற்கான (பயிற்றுவிப்பதற்கான) விண் ணப்பப் பத்திரங்களை இரசாயன விற்பனைநிலைய உரிமையாளர்களிடம் பிரதிப் பணிப்பாளரினால் கையளிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் 48 விவசாய விற்பனைநிலைய உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் விவசாய இரசாயன மருந்துகள் பற்றிய அறிவு இல்லாத விற்பனையாளர்கள் அல்லது இது பற்றய அறிவு இருக்கின்ற பயிற்றப்பட்ட உதவியாளர்கள் இல்லாத இரசாயான விற்பனையாளர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. (05)

# பிரதேச சபை காணியில் வசித்தோர் கட்டுடையில் குடியமர்வு

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் காணியில் நீண்டகாலம் குடியிருந்த 6 குடும்பங்கள் கட்டுடையில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பல வருடங்களுக்கு முன்னர் பிரதேச சபையின் காணியில் குடியமர்ந்த இவர்கள் பிரதேச சபைக்குரிய கட்டடம் அமைக்கப்பட்டு வருவதால் இடவசதி இல்லாமல் இருப்பதன் காரணமாக இவர்கள் கட்டுடையில் கேணியடி மூலையில் அமைந்துள்ள காணியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் இருப்புக்களை கடந்தவாரம் பிரதேச சபைத் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (104)

# நெல்லியடிப் பகுதி வீதிகளை விரைவாக புனரமைக்க கோரிக்கை



நெல்லியடிப் பகுதியில் உள்ள வீதிகளின் புனரமைப்புக்கள் மந்த கதியில் இடம்பெறுவதால் போக்குவரத்துக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, நெல்லியடி பெற்றோல் நிலையத்திற்கு முன்பாகவிருந்து நெல்லியடி சந்தி வரையிலான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படுகின்ற நிலையில் இதன் வேலைகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

புனரமைப்புப் பணிகள் காலை 6 மணியிலிருந்து மாலை 8 மணிவரையும் இடம்பெறுவதால் வர்கன நெரிசல்கள் அதிகமாக காணப்படுவதாகவும் அத்துடன் வாகனங்கள் சிறிது நேரம் நின்று ஒரு பாதையூடாக மாற்றிவிடுவதனால் தாமதமாகியே போக்குவரத்துக்கள் இடம்பெறுகின்றன.

எரிபொருள் நிலையத்திற்கு வருவோரும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் புனரமைப்பு பணிகள் விரைவாக பூர்த்தியாக்கப்பட்டால் இதனூடாக போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படும் என பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (18)

# மக்கள் வங்கியின் ஜெயஸ்ரீ வெற்றியாளர்களுக்கு பரிசு

மக்கள் வங்கியின் 51 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சாவகச்சேரி கிளையினால் மாதாந்தம் நடைபெறும் ஜெயஸ்ரீ வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந தசீலன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன், டிறிபேர்க் கல்லூரி உப அதிபர், சாவ்கச்சேரி நகரபிதா இ.தேவசகாயம்பிள்ளை, மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர்.

சர்வதேச மகளிர் தினத்தன்று நடத்தப்பட்ட வனிதா வாசனால சீட்டிழுப்பு அன்றைய தினம் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் திருமதி பீ.நிர்மல ராணி, திருமதி ரி.கவிதா, திருமதி.வீ.சுதர்சன் திருமதி என். மஞ்சுளா, திருமதி யூ.கௌசல்யா, திருமதி ரீ.கமலேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு வங்கியில் வைப்பிலிட்ட , பணத்திற்குரிய சர்ன்றிதழில் அப்பணத்தின் 2 மடங்கு பணம் வைப்பி லிடப்பட்டது. (11)

# கடும் வரட்சியால் தண்ணீருக்கு கால்நடைகள் பரிதவிப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள குளங்களின் நீர் மட்டம் படிப்படியாக குறைவடைந்து செல்வதால் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நிலவும் கடும் வரட்சியான காலநிலையால் நீர்நிலைகளின் நீர் வற்றி காணப்படுவதுடன் சில குளங்களின் நீர் மட்டமும் மிக வேகமாக குறைவடைந்து செல்கின்றன.

துணுக்காய் தென்னியான் குளம், கோட்டைக்கட்டிய குளம், கரும்புள்ளியான் குளம், குத்து வெட்டுவான் குளம் போன்ற குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதால் இப் பிர'தேசங்களில் தண்ணீருக்கு' பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அத்துடன் கால்நடைகளுக்கும் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (கே)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

(திருநெல்வேலி)

கோப்பாயில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திச் செல்கையில் கோப்பாய் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்.

இவர் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத் தப்பட்டபோது இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதவான் மா.கணேசராஜா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

மிருசுவிலைச் சேர்ந்த ஒருவர் நீர்வேலியில் முச்சக்கர வண்டியொன்றை மதுபோதையில் ஓட்டிச் சென்ற போது கோப்பாய் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

இவர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது இவரைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் மா.கணேசராஜா 5000 ரூபா அபராதம் விதித்ததுடன் இவரது சாரதி அனுமதிப்பத் திரத்தை மூன்று மாத காலத் திற்கு தடை செய்து உத்தரவிட்டார். (137)

# கைவிரல் அடையாளத்தை உறுதிப்படுத்த இயந்திரம்

(முல்லைத்தீவு)

மாவட்ட செயலகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கைவிரல் அடையாளத்தை உறுதிப் படுத்தும் இயந்திரப் பயன்பாடு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த 2 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

வேலையை இலகுப்படுத்தும் முகமாகவே இச்செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (04)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த இரதோற்சவத்தின் போது சுவாமி தேரில் ஆரோகணிப்பதைக் காணலாம்.

# முரசின் இன்றைய பலன்

(13.07.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 29 ஆம் திகதி. தசமி பின்னிரவு 3.03 வரை.
நட்சத்திரம் பரணி. பின்இரவு 1.17 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 10.30 - 12.00 வரை. சுபநேரம் 6.00 - 07.30 வரை.
எமகண்டம் 3.00 - 4.30 வரை. குளிகன்காலம் 7.30 - 9.00 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அலைச்சல், உத்தியோகத்தில் அலைச்சல், அனுசரிக்கவும், பயணங்களால் நன்மை. |
| ரிஷபம் | புகழ்ச்சி, தொட்டதெல்லாம் துலங்கும், பொன்பொருள் சேரும், எதிரிகள் மடங்குவார். |
| மிதுனம் | சகோதரர் சுகம், புத்திரர் வழியில் சஞ்சலம், முயற்சிகளில் வெற்றி, குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கடகம் | பணவரவு குடும்பத்தில் அந்நியோன்யம், உறவினர் வருகை, மனக்கவலைகள். |
| சிம்மம் | சுபகாரியம், சமுதாயத்தில் கௌரவம், தாராள பணவரவு, சேமிப்பு உயரும். |
| கன்னி | கவனம் தேவை, பிரச்சினைகள் மறையும், கடன்கள் தீரும், உடல் உபாதைகள். |
| துலாம் | கவலைகள், உறவினர் அனுசரணை, குலதெய்வ வழிபாடு, நண்பர் விரோதிகளாவார். |
| விருச்சிகம் | பணவரவு, தடைப்பட்ட காரியம் கைகூடும், வேலைப்பளு அதிகரிப்பு, கல்வியில் ஈடுபாடு. |
| தனுசு | சொற்பவிரயம், நற்பெயர் கிட்டும், கல்வியில் வெற்றி, பணவரவில் நெருக்கடி. |
| மகரம் | நல்ல தகவல், ஆடம்பர செலவுகள், கல்வியில மந்த நிலை, பணவரவில் நெருக்கடி. |
| கும்பம் | வாகன சுகம், தடைக்குப் பின் காரிய வெற்றி, எதிர்பாராத வெற்றி, பேச்சில் நிதானம். |
| மீனம் | பொன்பொருள் சேரும், கடன்கள் நிவர்த்தியாகும், பிரச்சினை, வியாபாரத்தில் போட்டி. |



# பல்லேகல டெஸ்ட் சமநிலை; தொடரை வென்றது இலங்கை



(பல்லேகல)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பல்லேகலயில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி பல்லேகலவின் நடைபெற்றது. இதில் 111 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி அசார் அலி, அசட் சபீக் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பாகிஸ்தான் அணி இரண்டாவது இனிங்ஸில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தி யது. இதில் அசார் அலி 136, அசட் சபீக் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் நான்கு, பெர்னாண்டோ மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி நேற்றைய இறுதி நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் சண்டிமல் 65, சங்கக்கார ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக அசட் சபீக்கும், தொடர் நாயகனாக சங்கக்காரவும் தெரிவானார்கள். பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 226. இலங்கை முதல் இனிங்ஸ் 337.

## அவுஸ்ரேலிய அணியில் 410 பேர்

(சிட்னி)

ஒலிம்பிக் போட்டி வருகிற 27ஆம் திகதி லண்டனில் தொடங்குகிறது. இந்தப் போட்டியில் 410 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி பங்கேற்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் அவுஸ்ரேலியாவின் சிறிய ஒலிம்பிக் அணி இதுவாகும். கடைசியாக 1992ஆம் ஆண்டு பார்சிலோனா ஒலிம்பிக்கில் 290 பேர் கொண்ட குழுவை அவுஸ்ரேலியா அனுப்பியிருந்தது. அவுஸ்ரேலிய அணியில் 224 வீரர்களும், 186 வீராங்கனைகளும் இடம் பெற்றுள்ளனர். இதில் 46 பேர் வெளிநாட்டில் பிறந்தவர்கள். ஒலிம்பிக் அணியில் இடம் பெற்றுள்ள அதிக வயதுடையவர் மேரி ஹன்னா. குதிரையேற்ற வீராங்கனையான இவரது வயது 57. குறைந்த வயது உடையவர் டைவிங் வீராங்கனை பிரிட்டானி பிராபென். இவரது வயது 16. குதிரையேற்ற வீரர் ஆண்ட்ரூ ராய் 7ஆவது முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்கிறார். டேவிட் மற்றும் ஹைய்லெ சாப்மன் தந்தை-மகள் ஆவர். இவர்கள் துப்பாக்கி சுடுதல் அணியில் இடம் வகிக்கிறார்கள்.

இதே போல் சீனாவும் தங்கள் அணி வீரர்களின் எண்ணிக்கையை வெகுவாக குறைத்துள்ளது. கடந்த ஒலிம்பிக்கில் 639 பேர் கொண்ட மிகப்பெரிய அணியை களம் இறக்கிய சீனா இந்த ஒலிம்பிக்குக்கு 396 வீரர், வீராங்கனைகளை மட்டுமே தேர்வு செய்திருக்கிறது. இருப்பினும் 2008 ஒலிம்பிக்கை போன்றே இந்த முறையும் முதலிடத்தை பிடிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

## கடும் ஊக்கமருந்துச் சோதனை

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக்கில் இதுவரை இல்லாத அளவுக்கு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட உள்ளது.

லண்டனில் 30ஆவது ஒலிம்பிக் போட்டி வரும் 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 12 வரை நடக்கவுள்ளது. இதில் 204 நாடுகளைச் சேர்ந்த 10,500 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வீரர்களுக்கு நடத்தப்படும் ஊக்கமருந்துசோதனையை இம்முறை அதிகபேரிடம் நடத்த, உலக ஊக்கமருந்து தடுப்பு மையம் (டபிள்யு.ஏ.டி.ஏ.,) முடிவு செய்துள்ளதாம். இதுகுறித்து டபிள்எ.ஏ.டி.ஏ. தலைவர் ஜான் பகே வெளியிட்ட அறிக்கை: சர்வதேச ஒலிம்பிக் சபையும், லண்டன் ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு சபையும் இணைந்து, இம்முறை அதிக ஊக்கமருந்து சோதனை நடத்த திட்டமிட்டுள்ளது. இவர்களுடன், ஊக்கமருந்து தடுப்பு மையம் ஏற்கனவே தகவல்களை பகிர்ந்து கொண்டுள்ளது.

இதனால், வீரர், வீராங்கனைகள் ஒலிம்பிக் கிராமத்தில் காலடி எடுத்து வைத்தது முதல், தீவிர கண்காணிப்புக்கு உள்ளாவர். இதை ஊக்கமருந்து வீரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தவிர, ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக, சந்தேகத்துக்கு இடமான 6,250 பேரிடம் ஊக்கமருந்து சோதனை நடத்த முடிவு செய்துள்ளோம்.

இதன் மூலம் ஊக்கமருந்து இல்லாத ஒலிம்பிக் என்ற சிறப்பு பெற முயற்சிக்கிறோம். அப்படியும் பங்கேற்றால், நீங்கள் ஏமாற்றுவது சக வீரர்களை மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள இரசிகர்களையும் ஏமாற்றுகிறீர்கள். இதனால் உங்கள் நாட்டுக்கும் அவமானம் தான். இப்படிப்பட்ட வீரர்களால் நினைத்த இலட்சியத்தை அடையமுடியாது. ஏதாவது ஒரு வழியில் பதக்கம் வென்று விட்டால், இதற்கு தகுதியானவர் தான், நான் என்று உங்களால் எப்போதும் கூறமுடியாது. இதனால், ஊக்கமருந்து பயன்படுத்தி போட்டிகளில் பங்கேற்க திட்டமிட்டு இருந்தால், நீங்களாகவே விலகிவிடுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## நியூசிலாந்து வெற்றி

மேற்கிந்தியத்தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. சென் கிற்ஸில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரொப் நிக்கல் 59 ஓட்டங்களையும், நேதன் மக்கலம் 50, பி.ஜே. வற்லிங் 40, டானியல் ஃபிளைன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக அன்ட்ரே ரசெல் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

250 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 34.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்று 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் அன்ட்ரே ரசல் 42 ஓட்டங்களை 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் பெற்றதைத் தவிர எந்தவொரு வீரரும் 20 ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. பந்துவீச்சில் ட்ரென்ட் போல்ட், ஜேக்கப் ஓரம், நேதன் மக்கலம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக ரொப் நிக்கல் தெரிவானார்.

## கண் பார்வையற்ற வீரரின் நம்பிக்கை

(லண்டன்)

70 மீற்றர் தூரத்திலுள்ள இலக்கிற்கு தன்னால் அம்பெய்ய முடியும் என்று கண்பார்வையற்ற வீரரான தென்கொரியாவின் ஜயம் டோங் கியூன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். லண்டன் ஒலிம்பிக் விழாவில் அவர் தென்கொரியா சார்பாக போட்டியிடவுள்ளார். முன்னாள் முதல்தர வீரரும், ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றவருமான கியூன் பயிற்சிகளை மிகச்சிறப்பாக மேற்கொண்டுவருகின்றார். ஏதேன்ஸ் மற்றும் பீஜிங்கில் ஒலிம்பிக் விழாக்களில் குழுநிலைப் போட்டி களில் 26 வயதான கியூன் தங்கப் பதக்கம் வென்றார்.



சிட்னி, ஏதேன்ஸ், பெய்ஜிங் ஆகிய ஒலிம்பிக் விழாக்களில் தென்கொரிய அம்பெய்தல் வீரர்கள் குழுநிலைப் போட்டிகளில்ஆதிக்கம் செலுத்தினர். எனினும் அவர்களால் தனிநபர் பிரிவுகளில் பதக்கம் வெல்ல முடியவில்லை. இந்த வரலாற்றை லண்டன் ஒலிம்பிக் விழாவில் தென்கொரிய அம்பெய்தல் அணி மாற்றும் என ஜயம் டோங் கியூன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## மார்க் பௌச்சர் அதிசயமானவர்

சர்வதேசப் போட்டிகளிலிருந்து தனது ஓய்வினை அறிவித்துள்ள தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் அதிசயமானவர் என அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளரும், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளருமான மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

தனது இறுதி டெஸ்ட் தொடரில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்திற்குச் சென்றிருந்த மார்க் பௌச்சர், முதலாவது பயிற்சிப் போட்டியில் இம்ரான் தாஹிர் வீசிய பந்து விக்கெட்டைத் தாக்கி, விக்கெட்டின் பெய்ல்ஸ் அவரது கண்ணைத் தாக்கியதை அடுத்து சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 3 மணிநேரச் சத்திரசிகிச்சையை அடுத்து அவர் மீண்டும் குணமடைய அதிக காலம் எடுக்கும் என்பதால் தனது ஓய்வினை மார்க் பௌச்சர் அறிவித்துள்ளார். இந்நிலையில் பௌச்சருக்காகக் கவலைப்படுவதாகத் தெரிவித்துள்ள மிக்கி ஆர்தர், தனது இறுதித் தொடரில் மிகச்சிறப்பாக ஆடுவதற்கு பௌச்சர் ஆர்வத்துடன் காணப்பட்டார் எனவும், அவரது முடிவு இவ்வாறு அமைந்தமை மிகுந்த வருத்தம் தருவதாகவும் தெரிவித்தார். பௌச்சரோடு இணைந்து தென்னாபிரிக்க அணியிலும், உள்ளூர் அணியிலும் செயற்பட்ட மிக்கி ஆர்தர், மார்க் பௌச்சருடன் தனக்கு அதிகமான ஞாபகங்கள் காணப்படுவதாகவும், தான் மார்க் பௌச்சருடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்ததோடு, மார்க் பௌச்சரின் குடும்பத்தினரையும் தான் நன்றாக அறிந்திருந்ததாகத் தெரிவித்தார்.

## வளர்ந்த ஆண்கள் அழுவது தவறல்ல



வளர்ந்த ஆண்கள் அழுவது தவறானதல்ல என உலகின் முதற்தர ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் தெரிவித்துள்ளார். சாதாரண மனிதர்களே நீங்கள் என வெளிப்படுத்துவதற்கு அழுவது ஒரு சான்றாகும் என ரோஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் போட்டிகளின் போதும், தோல்விகளின் போதும் தனது அழுகையை வெளிப்படுத்தும் பழக்கத்தைக் கொண்ட ரோஜர் பெடரர், அண்மையில் தனது 7ஆவது விம்பிள்டன் பட்டத்தை வென்ற போதும் அழுகையை வெளிப்படுத்தியிருந்தார். அவரது வழமையான அளவில் அது காணப்படாத போதிலும் அவர் தனது கருத்துக்களை அழுகைக்குச் சார்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

விம்பிள்டனின் இறுதிப் போட்டியின் பிரமாண்டத்தைக் கருத்திற் கொள்ளும் போது இறுதிப் போட்டியில் பங்குபற்றிய அன்டி முர்ரே அல்லது தனக்கு அப்போட்டியின் முடிவு மிகுந்த கவலையானதாக, அதிகளவு அழுகைகளை வரவழைப்பதாக அமையும் என்பதை உணர்ந்திருந்ததாகத் தெரிவித்த ரோஜர் பெடரர், அழு கையை வெளிப்படுத்துவது இரசிகர்களுடன் அதிகம் இணைப்பதாக உணர்வதாகவும் தெரிவித்தார்.

வீரர்கள் அழும்போது இரசிகர்களிடம் தொடர்புகளைப் பேணுவதாகத் தெரிவித்த ரோஜர் பெடரர், வீரர்கள் வெற்றிபெறுவது பற்றியும் தோல்வியடைவது பற்றியும் கவனத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இரசிகர்கள் உணர்ந்து கொள்வார்கள் எனவும் தெரிவித்தார். ஆகவே இரசிகர்கள் எவ்வாறு யோசிக்கிறார்கள் என்பது பற்றி வீரர்களாகிய தாங்களும் கரிசனை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## எதிர்பார்க்காத தோல்வி



(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிராக ஒருநாள் போட்டித் தொடரை 4:0 என்ற கணக்கில் தோல்வியடைய வேண்டி ஏற்படும் என ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார். அணியாக அனைவரும் இணைந்து ஒன்றுசேர்ந்து இந்தத் தோல்வி குறித்து ஆராய வேண்டியிருக்கிறது. கடந்த 12 மாதங்களாக அணியின் திறமை வெளிப்பாடுகளை ஆராய்ந்து முன்னேற வேண்டிய இடங்கள் குறித்து ஆராய வேண்டும். தயார்படுத்தல்களில் தவறுகள் எவையும் நிச்சயமாக இல்லை. எங்களது பயிற்சிகள் சிறப்பானவையாகக் காணப்பட்டது. அத்தோடு பயிற்சிப் போட்டிகளில் மிகச்சிறந்த கிரிக்கெட் விளையாட்டை வெளிப்படுத்தியிருந்தோம். எனினும் காரணங்களை வெளிப்படுத்தி தோல்விகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

## மரடோனா நீக்கம்



ஐக்கிய அரபு எமிரேட்சை சேர்ந்த அல் வாஸ்ல் அணியின் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து ஜாம்பவான் மாரடோனா நீக்கப்பட்டார். ஆர்ஜென்டினாவின் கால்பந்து ஜாம்பவான் மாரடோனா, 51. 1986 உலக கோப்பை தொடரில் ஆர்ஜென்டினா அணிக்காக, தனி நபராக போராடி கோப்பை வென்று தந்தார். 1990இல் அணியை இறுதிப் போட்டிக்குக் கொண்டு சென்றார். கடந்த 2010 உலக கோப்பை தொடரில் பயிற்சியாளராக இருந்தவர். இதில் அணி சாதிக்காததால், பதவியில் இருந்து விலகினார். கடந்த மே 2011இல், ஐக்கிய அரபு எமிரேட்சின், அல் வாஸ்ல் கால்பந்து கிளப் அணிக்கு பயிற்சியாளராக, 2 ஆண்டு ஒப்பந்தத்தில் பொறுப்பேற்றார். இவரது நியமனம் அணிக்கு பெரிய அளவில் வெற்றி எதுவும் தேடித்தராத நிலையில், தற்போது பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

# இளைஞர் சேவை தேசிய கரப்பந்து அணியில் 4 மகாஜனாக் கல்லூரி வீராங்கனைகள்


தமிழரசி


புகழரசி

(தெல்லிப்பளை)

இலங்கை தேசிய இளைஞர் சேவை கரப்பந்தாட்ட தேசிய அணியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியைச் சேர்ந்த நான்கு வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இளைஞர் சேவைகள் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு கரப்பந்தாட்ட அணியின் வீராங்கனைகளான பா. புகழரசி, பா. தமிழரசி, பா. கலாயினி, ச. தர்சினி ஆகியோர் மேற்படி இளைஞர் சேவை மன்ற கரப்பந்தாட்ட தேசிய அணியில் இடம்பிடித்துள்ளனர்.

மகாஜனாக் கல்லூரி அணி சார்பாக சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி கல்லூரியின் பல வெற்றிக்கு வித்திட்ட இவர்கள், கடந்த சில காலமாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கரப்பந்தாட்ட வல்லுநர்களால் அவதானிக்கப்பட்டு இனங்காணப்பட்டனர்.

இவர்களின் திறமையை சரிவரப் புரிந்துகொண்ட இளைஞர் சேவை மன்றக் கரப்பந்தாட்ட அணி தமது தேசிய அணியில் வாய்ப்பு வழங்கி யுள்ளது. இதன் மூலம் இவர்களின் வளர்ச்சி அடுத்த கட்ட நிலையை நோக்கி நகரும் என்ற நம்பிக்கையையும் அவர்கள் வெளியிட்டனர். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய கரப்பந்தாட்ட அணியில் மேற்படி நான்கு பேரும் உள்வாங்கப்பட்டமை குறித்து, இவர்களின் பயிற்றுவிப்பாளர் சி. தயாளபாலன் குறிப்பிடுகையில், இந்த நான்கு வீரர்களும் திறமையான வீரர்கள். இவர்கள் தேசிய இளைஞர் சேவை அணியில் இடம்பிடித்தமை மகிழ்ச்சி தருகின்றது. இவர்களை இனங்கண்டு தமது அணியில் இணைத்துக் கொண்டமையானது அவர்களின் வளர்ச்சியை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஒரு நிகழ்வாகவே நான் பார்க்கின்றேன். சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்தி, இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணியில் இடம்பிடிக்க இவர்கள் உழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என அவர் தெரிவித்தார். (93)


கலாயினி


தர்சினி

## மாரடைப்பால் கால்பந்து வீரர் மரணம்

பிரேசில் இளம் கால்பந்து வீரர் மாரடைப்பால் மரணமாகியுள்ளார்.

பிரேசில் நாட்டின் பிரபல கால்பந்து கிளப் அணி சா பெர்னார்டோ. இந்த அணியில் இடம் பெற்றிருந்த 17 வயது இளம் வீரர் அர்ஜுனா லூயிஸ் ராமோஸ், கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியின்போது மாரடைப்பு ஏற்பட்டு களத்திலேயே சுருண்டு விழுந்து இறந்தார். திறமையான வீரராக விளங்கிய ராமோசை சக வீரர்கள் பீலே என்று அழைத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இவரின் மரணம் குறித்து பிரேசில் கால்பந்து சம்மேளனம் இரங்கல் செய்தி வெளியிட்டது. இதில் வளர்ந்து வந்த இந்த வீரரின் மரணம் தேசிய அணிக்குப் பெரும் இழப்பாகும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட வலைப்பந்தாட்டம் வடமராட்சி மெதடிஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மக்கள் வங்கியின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் 14 வயதுப் பிரிவினருக்காக நடத்திய கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாலயமும் வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 5 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை 12:6 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரு அணிகளும் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

21 வயதுப் பிரிவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைமை வென்றமை குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட மட்ட பெண்கள் கரப்பந்து சம்பியனானது கோப்பாய் ஐக்கியம்

### ஆண்கள் பிரிவு இறுதிப் போட்டிக்கு அணிகள் தகுதி

(கோப்பாய்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரை யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திவருகின்றது. கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டது. ஆண்களுக்கான போட்டி இரு பிரிவுகளாக இடம்பெற்றது. மற்றும் பெண்களுக்கான தொடர் ஒன்றும் நடத்தப்பட்டது.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய அணியும், சங்கானை ஐக்கிய அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கோப்பாய் ஐக்கிய அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான 'ஏ' பிரிவு தொடரின் முதலாவது அரையிறுதியில் ஆவரங்கால் மத்தி அணியும், உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டித் தகுதி பெற்றது.

மற்றைய இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், புத்தூர் கலைமதி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து 'பி' பிரிவுக்கான முதலாவது அரையிறுதியில் நாயன்மார்கட்டு பாரதி அணியும், அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின. இதில் அச்சுவேலி ஸ்ரார் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதியில் நீர்வேலி ஐக்கியம் அணியும், புத்தூர் வளர்மதி அணியும் மோதின. இதில் புத்தூர் வளர் மதி அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. 'ஏ', 'பி' அணிகளுக்கான இறுதிப் போட்டி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (118)

## ஆவரங்கால் மத்தி சம்பியன்



(கைதடி)

குமரன் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட ஆண்டு நிறைவுக் கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் மத்தி அணி கைப்பற்றிக் கொண்டது.

கைதடி மேற்கு குமரன் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த முதலாம் திகதி குமரன் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.இவ் இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் 3-1 என்ற செட் கணக்கில் ஆவரங்கால் மத்திய அணி வெற்றிபெற்று ஆண்டு நிறைவுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆவரங்கால் மத்தி அணியின் சிவசொரூபன் தெரிவானார். (118, 02))

## இதய நோயால் மரணம்



(கொழும்பு)

பல வருடங்களாக விளையாட்டுத்துறை அமைச்சின் மருத்துவப் பிரிவுக்கு தலைவராகப் பதவி வகித்தவரும்பிரபல நரம்பியல் நிபுணருமான மருத்துவர் கீதாஞ்சன மெண்டிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இதய நோயால் பாதிக்கப்பட்ட இம்மருத்துவர்கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.

இவரின் மரணம் குறித்து விளையாட்டு அமைச்சு இரங்கல் வெளியிட்டது.

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம்: சிறைக்காவலர்களை சிறைப்படுத்தி சிறையிலிருத்தல்



- சாலையூரான் -

**பு**லிகளுக்கெதிரான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அரசு கூறிவரும் நிலையில் வவுனியா சிறையில் இருந்து வேறு சிறைக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவர் அண்மையில் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்.

குண்டுச் சத்தங்கள் ஓய்ந்து போயிருக்கும் இந்த நான்காண்டு காலத்தில் இவ்வாறானதொரு கொலைச் சம்பவம் சிறையில் இடம்பெற்றிருப்பது, தமிழ் தரப்பில் மட்டுமன்றி அரசு மற்றும் தென்னிலங்கை தரப்புக்கள் மத்தியிலும் பலத்த உணர்வலைகளை கிளப்பி விட்டிருக்கின்றன.

புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதால் இன நல்லிணக்கத்தை நிலையாக ஏற்படுத்துவதே இனி முன்னெடுக்க வேண்டிய பிரதான பணி என உள்நாட்டிலும் அவ்வாறே வெளியேயிருந்தும் அரசை நோக்கி அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் நிலையில் இந்த தமிழ் அரசியல் கைதியின் கொலை விவகாரம் அரசுத்தரப்புக்கும் சங்கடத்தை ஏற்படுத்தும் ஒரு விவகாரமாக நடந்து முடிந்திருக்கிறது.

உண்மையில் மிகக் குறுகிய ஒரு கால இடைவெளியில் கைதிகளுக்கும் சிறைக்காவலர்களுக்கும் இடையேயான இந்த முரண்பாடுகள் இவ்வளவுக்கு எவ்வாறு முனைப்பு பெற்றிருக்கிறது என்பது புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

தடுப்பிலிருக்கும் கைதிகள் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு உரிய தீர்ப்பு நீதியான முறையில் அறிவிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. கைதி ஒருவரைக் கொலையாகும் அளவுக்கு அடித்த காவலர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும்.

தம்மைத் தாமே மேலும் நெருக்கடிக்குள் தள்ளி விடுவது போன்ற ஒரு செயற்பாட்டுக்கு இத் தமிழ் கைதிகள் ஏன் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதுதான் இங்கே சர்ச்சைக்குரிய விடயமாகும்.

சிறைக்காவலர்களுக்கும், கைதிகளுக்கும் இடையேயான இந்த முட்டி மோதலுக்கு பிரதான காரணமாக கைதிகள் மூவர் வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டமை காரணமாகக் கூறப்படுகிறது.

இதுபோன்ற இதைவிட மோசமான சம்பவங்களை கடந்த காலங்களில் தடுப்பிலிருந்த கைதிகள் முகம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக ஜனநாயக வழிமுறைக்குட்பட்டு தமதுகோரிக்கைகளை, உரிமைகளை அடைந்து கொள்ள சிறைச்சாலையில் பல போராட்டங்களை கைதிகள் முன்னெடுத்திருக்கிறார்கள்.

ஆனால், தமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சிறைக்காவலர்களை பணயம் வைப்பது எத்தகைய பின்விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்பதை இக்கைதிகள் புரிந்து கொள்ள முடியாதவர்கள் அல்ல. சிறைச்சாலை ஊழியர்களை பணயக் கைதிகளாக்கியதன் மூலம் தமது நோக்கங்களை அடைந்து கொள்வது என்பதை விட அரசுக்கும் பாதுகாப்பு தரப்பிற்கும் தம்மை குறித்து முறையான பதிவொன்றை ஏற்படுத்த இக்கைதிகள் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதே உண்மையான விடயமாகும்.

சிறைச்சாலை ஊழியர்கள் மூவர் கைதிகளால் பணயம் வைக்கப்பட்ட இந்த முயற்சியின் மூலம் வெளியே வேறு சிறைச்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்ட மூன்று தமிழ் கைதிகளையும் மீளவும் தமது சிறைச்சாலைக்கு கொண்டு வர வைக்க முடியும் என்பதை கைதிகள் எவ்வாறு உறுதிப்படுத்தி தமது பணயம் வைக்கும் முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பது புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.

இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு சிறைச்சாலைக்குள் கண்டெடுக்கப்பட்ட தடயங்கள் சிறைக்குள்ளிருந்து நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் தொலைத் தொடர்புகளை இக்கைதிகள் பேணி வந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன்பிறகு இக் கைதிகளுக்காக வெளியே குரல் கொடுத்து வந்த மனிதஉரிமை அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் யாவும் இவர்களுக்காக இனி எவ்வாறு குரல் கொடுக்க முடியும் என்கிற விடயமும் மிக சிக்கலான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இச்சம்பவத்துக்குப் பிறகு கூட இருந்த தமிழ் அரசியல் கைதிகள் உட்பட நாட்டின் பல சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல நூற்றுக்கணக்கான கைதிகள் மீதும் வீணான சந்தேகமும் அச்சமும் உருவாவதற்கான வழியொன்று இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர இக் கைதிகள் விடுவிக்கப்படுவதற்கான வழிகள் முன்னரை விட இப்போது பலமாக அடைக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மையான நிலைமையாகும்.

ஆனால், வெளியே, அரசுக்கு எதிராக இனத்துவ அரசியலை முன்னெடுப்போருக்கு இச்சம்பவத்தின் மூலம் பலமான தீனி கிடைத்திருக்கிறது. கைதியின் மரணம் குறித்து இதுவரை தமிழ் ஊடகங்கள் மூலம் வெளிவந்திருக்கும் செய்திகள் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த உணர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் அதேசமயம், இச்சம்பவத்தால் தமிழ் மக்களுக்கும் அரசிற்குமிடையே இதுவரை நிலவிவந்த இணக்கமான சூழ்நிலைமைகள் மீதும் பலத்த பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

சர்வதேசத்தைக் கொண்டு இலங்கை அரசை அம்பலப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி மீது பாதிப்பை ஏற்படுத்தியிருப்பது போன்று சிறைச்சாலை ஊழியர்களை பணயம் வைக்க மேற்கொண்ட முயற்சியானது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை மட்டுமன்றி வெளியே விடுதலையான முன்னாள் போராளிகளின் இயல்பு வாழ்வின் மீதும் பாதகமான நிலைமைகளை ஏற்படுத்தும் ஓர் செயற்பாடாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் பற்றிய நீண்டஅனுபவத்தில் ஜனநாயக வழி தமிழ் தலைமைகளாயினும் சரி வன்முறை வழி தலைமைகளாயினும் சரி தமிழ் இனவாதத்தை முன்னெடுத்த தேசிய தலைமைகளின் அதிகாரத்துவ நோக்கங்களுக்கு புலிகள் கூலி அடிமைகளாக பயன்படுத்தப்பட்ட வரலாறுதான் மீண்டும் இப்போது சிறைக்கைதிகள் விவகாரத்திலும் நிகழ்ந்திருக்கின்றது.

இதில் ஒரு சிறுமாற்றம்: முன்பு இத் தேசியத் தலைமைகளுக்காக புலிகள் புரட்சியின் பெயரால் அடிமாடுகளாக உழைத்து பலியானார்கள். இப்போது புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் பரிதாபத்துக்குரிய இத் தமிழ் கைதிகள் தேசிய தலைமைகளின் தலைமைத்துவ ஆதிக்க நலன்களுக்காக பலிக்கடாவாக பயன்படுத்தப்படுகிறார்கள்.

தேசிய விடுதலையின் பெயரால் போக்கிடமின்றி நாதியற்று அடைபட்டிருக்கும் இந்த அப்பாவிச் சிறைக்கைதிகளும் இந்த அதிகாரத்துவ தலைமைகளின் நலன்களுக்காக இனிவரும் காலங்களிலும் தம் உயிரை விலையாகக் கொடுக்க வேண்டுமென்பது ஒரு விதியாக அமைந்திருக்கின்றது போலும்.

# 'விஸ்வரூப' அழகி



**க**மல் நடிக்கும் "விஸ்வரூபம்" படத்தின் கதாநாயகிகளில் ஒருவர் பூஜாகுமார் லக்னோவைச் சேர்ந்தவர். இவர் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியல், நிதி ஆகியவற்றில் பட்டம் பெற்றுள்ளார். இந்திய நடனக் கலைகளான பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் வாழ்ந்து வரும் இவர் எப்படி தமிழ் திரைப்படத்தில் கதாநாயகியானார்?


1995ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க இந்தியர்களுக்கான அழகிப்போட்டியில் வெற்றி பெற்றார். "பிக் பீ" அமிதாப்பச்சனின் தயாரிப்பு நிறுவனத்தால் "வளர்ந்துவரும்" நட்சத்திரங்களில் ஒருவராக 60,000 போட்டியாளர்களுடன் போட்டியிட்டுத் தேர்வானார். "வி" சனலில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றினார்.

அமெரிக்காவில் உள்ள நாடகக் கலைகளுக்கான அகடமியில் இணைந்து நடிகையானார். தமிழில் 2000 ஆம் ஆண்டில் வெளியான "காதல் ரோஜாவே" திரைப்படத்தில் நடித்துள்ளார். மேலும் பிரபுதேவா, சிம்ரன், ரம்பா நடித்து 1997ஆம் ஆண்டில் வெளியான வி.ஐ.பி. படத்திற்காக பூஜா முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டார். பின்பு அதிலிருந்து விலகினார்.

"1001 ஓடி'ன்ஸ்" என்ற குறும்படத்தை எடுத்து, ஜேர்மனியில் நடைபெற்ற விழாவில் சிறந்த குறும்படத்துக்கான விருதைப் பெற்றுள்ளார்.

இத்தகைய இவரின் மாறுபட்ட பல்வேறு முகங்கள்தான் "விஸ்வரூபம்" திரைப்படத்தில் இவருக்கு வாய்ப்பைத் தேடிக் கொடுத்துள்ளது.

# சந்தானத்தின் ரேட்!



**ச**ந்தானத்துக்கு இருக்கிற மார்க்கெட்டை கருத்தில் கொண்டு, அவரை ஹீரோவாக நடிக்குமாறு பலரும் கேட்கின்றனர். ஆனால், ஏற்கனவே, தான் ஹீரோவாக நடித்த, "அறை எண் 305இல் கடவுள்" என்ற படம் ஓடாததால், மீண்டும் ஹீரோவாக நடிப்பதா, வேண்டாமா என்ற பலத்த யோசனையில் உள்ளார் சந்தானம். இதற்கிடையில் சிம்பு நடிக்கும் "வாலு" படத்துக்கு ஐம்பது நாட்கள் கால்ஷீட்டுக்கு சந்தானத்துக்கு மொத்தமாக ஒன்றரை கோடி ரூபா சம்பளம் பேசப்பட்டுள்ளது. படத்தைத் தயாரிக்கும் நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி "சம்பளத்தை இன்னும் குறைத்துக் கொள்ள முடியுமா?" எனக் கேட்டிருக்கிறார். "எனக்கு சினிமாவில் ஆரம்பத்தில் வாய்ப்பளித்து திருப்புமுனையை ஏற்படுத்திக்கொடுத்தது சிம்புதான். அதற்காகத்தான் இவ்வளவு குறைவான சம்பளம்" எனக் கூறியிருக்கிறார். உண்மைதான்... தற்போதைய நிலவரப்படி ஒரு நாள் கால்ஷீட்டுக்கு ரூபா10 இலட்சத்திருந்து ரூபா 12 இலட்சம் வரை பெறுகிறார் சந்தானம்.

# மாயமான மோனாலிசா

**1911ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை.**

பாரிஸில் உள்ள லூவர் மியூசியத்தில் தளபாடங்கள் பழுது பார்ப்பவராக வேலை செய்த இத்தாலியைச் சேர்ந்த வின்சென் பெருகியா(29) மறுநாள் வார விடுமுறை என்பதால் மியூசியம் மூடப்பட்டிருக்கும் என்பதைத் தெரிந்துகொண்டு மியூசியம் மூடப்பட்டவுடன் உள்புறமாக உள்ள ஓர் அறைக்குள் ஒளிந்து கொண்டான்.

மறுநாள் திங்கட்கிழமையன்று மறைவிடத்திலிருந்து வெளிவந்த பெருகியா, சுவரில் மாட்டப்பட்டிருந்த விலை மதிப்பற்ற உலகப் புகழ் பெற்ற ஓவியமொன்றை கழற்றி அதன் பிரேம்களை அகற்றி ஓவியத்தை மட்டும் சுருட்டி எடுத்து தன்னுடைய நீண்ட அங்கிக்குள் மறைத்து வைத்து வெளியேறினான்.

லூவரிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள அவனது வீட்டிற்குச் சென்றவன், அந்த ஓவியத்தை ட்ரங்க் பெட்டிக்குள் வைத்து மூடினான். அவன் திருடியது உலகப் புகழ்பெற்ற ஓவியர் லியோனார்டோ டாவின்சியின் மாஸ்டர் பீசாக கருதப்பட்ட "மோனாலிசா" ஓவியமாகும். அந்த ஓவியத்தைத் தான் தாறுமாறாக சுருட்டி எடுத்து வந்து பெட்டிக்குள் வைத்திருந்தான்.

செவ்வாய்க்கிழமையன்று புகழ்பெற்ற ஓவியர்களின் ஓவியங்களை அச்சு அசலாக நகலெடுத்து சுற்றுலாப் பயணிகளிடம் ஒரிஜினல் ஓவியமென்று விற்பனை செய்யும் பாரிஸ் நகர ஓவியன் லூயிஸ் பிரோவ், மியூசியத்திற்குள் வந்தபோது ஐந்தாண்டுகளாக காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த மோனாலிசா ஓவியத்தை காணாமல் மியூசியப் பாதுகாவலர்களிடம் புகார் செய்தார்.

பகல் நேரத்திற்குள் அறுபதுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் லூவர் மியூசியத்தில் குவிந்தனர். ஒரு வாரம் மியூசியத்தின் மூலை முடுக்கெல்லாம் ஆராய்ந்து தேடியதில் அநாதையாகக் கைவிடப்பட்ட பிரேம்மைத் தவிர வேறு தடயம் ஏதும் கிடைக்கவில்லை. கடைசியில் மியூசியம் பாதுகாவலர்கள் ஒட்டுமொத்தமாக பணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

விலை மதிப்பற்ற மோனாலிசா ஓவியம் திருடப்பட்ட தகவல் காட்டுத் தீயாக நாடெங்கும் பரவியது. நாடே துக்கத்தில் ஆழ்ந்தது. நாட்டின் எல்லைகள் மூடப்பட்டு கப்பல்கள், ரயில்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டன. ஓவியத்தைக் கண்டுபிடித்து ஒப்படைப்பவர்களுக்கு 25 ஆயிரம் பிராங் பரிசளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

வதந்திகள் பலவிதத்தில் உலா வந்தன. சந்தேகப்படுபவர்களை பிடித்து விசாரித்தனர். ரோம் நகரில் பிறந்து பாரிஸில் குடியேறிய கவிஞர் கலியாவ் அப்போலினெய்ரேவை (1880 - 1918) விசாரணை செய்து சிறையில் அடைத்தனர். விசாரணையில் கலியாவ், அவரது ஓவிய நண்பர் பப்லோ பிகாசோவை (1881 - 1973) சந்தேகப்படுவதாகச் சொல்ல பொலிஸாரும் பிகாசோவை விசாரித்தனர். நீதிமன்ற விசாரணையின்போது அவரது தடுமாற்றமும் பயமும் பிகாசோவை நிரபராதியென காட்டியது. பின்னர் பிகாசோ, கலியாவ் இருவருமே விடுவிக்கப்பட்டனர்.

16 ஆம் நூற்றாண்டில் டாவின்சியால் வரையப்பட்ட 30 அங்குல நீளமும் 21 அங்குல அகலமும் உள்ள மோனாலிசா ஓவியம் அடுத்த இரண்டாண்டுகள் பெருகியாவின் ட்ரங்க் பெட்டியிலேயே அடைபட்டிருந்தது. 1913 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி இத்தாலிக்குச் சென்ற பெருகியா, ப்ளோரன்ஸ் நகரில் பழங்கால கலைப்பொருள்களை விற்பனை செய்யும் அல்பேர்ட் கெரியிடம் மோனாலிசா ஓவியத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள முடியுமா? என்று பேரம் பேசினான். 5 இலட்சம் லியார் கொடுத்தால் விற்பதாகவும் இல்லையெனில் பழையபடி மியூசியத்திலேயே ஓவியத்தை ஒப்படைக்கப் போவதாகவும் கூறினான். அந்த ஓவியம் உண்மையிலேயே ஒரிஜினல்தானா என்பதை கண்டறிய தன் நண்பர் கியோலன் போகியுடன் ஹோட்டல் திரிபோலியில் தங்கியிருந்த பெருகியாவின் அறைக்கு கெரி சென்றார்.

பெருகியா அவனது ட்ரங்க் பெட்டியை திறந்த போது பழைய ஷூக்கள், ஜட்டிகள், சட்டைகளின் நடுவே சிவப்புத் துணியில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த மோனாலிசா ஓவியத்தை பார்த்தபோது எவ்வித பாதிப்புமின்றி ஓவியத்தின் பின்புறம் லூவர் மியூசிய அதிகாரிகளின் கையொப்பமும் முத்திரையும் இருந்தது. கெரியும் அவரது நண்பர் போகியும் ஆச்சர்யத்தில் வாயடைத்துப் போனார்கள்.

உண்மையான ஓவியம்தான் என்பதைக் கண்டறிந்த கெரியும் போகியும் சில மணி நேரத்திற்குள் பொலிசுக்கு தகவல் கொடுத்தனர். ப்ளோரன்ஸ் நகர தலைமை பொலிஸ் அதிகாரி மற்றும் பல துப்பறியும் நிபுணர்கள் வந்து குவிந்தனர். ஓவியம் கைப்பற்றப்பட்டதோடு பெருகியாவும் கைது செய்யப்பட்டான்.

அடுத்து இரு மாதங்கள் மோனாலிசா ஓவியம் இத்தாலி மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் பாதுகாப்பாக பாரிஸ் நகரத்திற்கு திரும்ப அனுப்பப்பட்டது. 1914 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதியிலிருந்து மோனாலிசா ஓவியம் பழையபடி லூவர் மியூசியத்தை அலங்கரிக்கத் தொடங்கியது.



1914 ஜூன் 4.ஆம் திகதி ப்ளோரன்ஸ் நகர நீதிமன்றத்தில் பெருகியா மீது விசாரணை தொடங்கியது. பைத்தியம் பிடித்தவன் போல் உணர்ச்சி வசப்பட்டு நீதிபதியிடமும் தன்னுடைய வழக்கறிஞர்களிடமும் விவாதித்தான். ஓவியத்தின் மீதுள்ள பற்றுதலால் பிரான்ஸ் நாட்டிலிருந்து காப்பாற்றவே தேச உணர்வுடன் அதைத் திருடியதாகக் கூறினான். நீதிமன்ற அறைக்குள் ஏற்கெனவே பெருகியா ஒரு ஹீரோவாக மாறியிருந்தான். பொதுமக்கள் அவனுக்குச் சாதகமாக இருந்தனர். அவன் விசாரணைக் கைதியாக சிறைக்குள் இருந்த போதே அவனுக்கு ஏராளமான காதல் கடிதங்களையும் மதுவகைகளையும் ஸ்பெஷலாக தயாரிக்கப்பட்ட கேக் வகைகளையும் பெண்கள் அனுப்பி வைத்தனர்.

அவனது முரண்பாடான நடத்தையையும் முன்னுக்குப்பின் முரணான விவாதங்களையும் கண்டு வெறுப்படைந்த நீதிமன்றம் அவனை மனோதத்துவ நிபுணரிடம் பரிசோதனைக்காக அனுப்பியது; மருத்துவ அறிக்கையில் அவனை "குறைபாடுள்ள புத்திசாலி" எனக் குறிப்பிட்டிருந்ததால் நீதிமன்றம் சமாதானமடைந்து சாதாரண சிறைத் தண்டனை அளித்ததோடு விரைவில் விடுதலை செய்தது.

அடுத்த சில ஆண்டுகளில் பெருகியா இத்தாலிய இராணுவத்தில் சேர்ந்து முதலாம் உலகப்போரில் பணியாற்றி திரும்பிய பின்னர் திருமணம் செய்துகொண்டு பிரான்ஸ் நாட்டிற்கே திரும்பி சென்று, பெயின்ற் கடையொன்றைத் திறந்தான். 1925 அக்டோபர் 5ஆம் திகதி இந்த 'மேனாலிசா' திருடன் தனது 44 ஆவது வயதில் இறந்துபோனான்.

மோனாலிசாவின் ஓவியத்தைப் பார்க்கும்போதெல்லாம் பெருகியாவின் நினைவும் நிச்சயம் வரும். இத்தாலியைப் பொறுத்தவரை, அவன் தேசபக்தியுள்ள ஒரு ஹீரோதான். அவனை கௌரவிக்கும் வகையில் கடந்த ஆண்டு (2011) ஆகஸ்ட் மாதம் இத்தாலியில் நடந்த நாடக விழாவில் 'தி ட்ரயல் ஒஃப் வின்சென் பெருகியா' என்ற நாடகத்தில் அவனை ஒரு தேசபக்தியாளனாக சித்தரித்திருந்தனர்.

இதில் ஒரு சுவாரசியமான விஷயம் என்னவென்றால், பிகாசோவின் ஓவியங்கள்தாம் இன்று உலகிலேயே அதிகமாக திருடப்பட்டுள்ளன. லண்டனில் உள்ள 'தி ஆர்ட் லொஸ் ரிஜிஸ்டர்' என்ற நிறுவனம் உலகில் திருடப்படும் ஓவியங்கள், கலைப்பொருட்கள், சேகரிப்புகள் எவை எவை என்பதை பெரிய அளவில் பதிவு செய்துவருகிறது. அதன் தகவலின்படி பிகாசோவின் ஓவியங்கள் 600-க்கும் மேல் திருடப்பட்டுள்ளன. ஓவிய வரலாற்றிலேயே அதிக அளவில் தன்னுடைய ஓவியங்களை இழந்துள்ளவர் பிகாசோ என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# பவளப்பாறைகள்


பவளப்பாறைகள் மழைக்காடுகளுக்கு சமமாய் பல்வேறு வகைப்பட்ட சூழல்மண்டலத்தைக் கொண்டவை. அவை வெப்பமண்டல நீரிலும் மிதமான தட்பவெப்பமுள்ள நீரிலும் காணப்படுகின்றன. ஆழமற்ற நீரில் பாறைகள் வடக்கில் 30 டிகிரிக்கும், தெற்கில் 30 டிகிரிக்கும் இடையே உள்ள அட்சரேகைகளில் தென்படுகின்றன. உலக அளவில் பவளப்பாறைகள் வெறும் 0.1மூ கடல்பரப்பையே நிரப்புகின்றன. அவை 18 டிகிரி செல்ஷியஸுக்கு மேற்பட்ட வெப்பநிலைகளில் பிழைத்திருக்கின்றன.

பவளப்பாறைகளின் மாறுபட்ட நிலைகள் பல்வேறு வகைத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு இயற்கையான இருப்பிடம் மற்றும் ஒதுங்கிடமாய் அமைகின்றன. இப்படி ஒதுக்கிடம் தேடுபவை கடல்பாசிகள், கடற்புற்கள், கடல்பஞ்சுகள், நத்தை, சிப்பி போன்ற உயிரினங்கள் மற்றும் பல்வேறு வகையான மீன்கள். இப்பாறைகள் கல்சியம் காபனேற்றால் உருவானவை மற்றும் சுண்ணாம்புக்கல்லை உருவாக்கும் உயிரினங்களால் ஒருங்கிணைக்கப்பட்டவை. பவளப்பாறைகள் ஊட்டச்சத்துக்களில் குறைபட்டவையாயினும், பல்வகைப்பட்ட அடிப்படை நிலை உற்பத்தியாளர் உயிர்வகைகளின் இணைந்த செயல்பாடு, இவற்றை பூமியில் மிக செழிப்பான சூழல்மண்டலமாக்குகிறது.

பல ஆயிரம் ஆண்டுகளில் உருவாகியிருக்கும் பவளப்பாறைகள் மிகப் புராதனமான அமைப்புகளாகும். அவை பல்வகை மீன்களுக்கு உணவு அளிக்கின்றன. நத்தை, சிப்பி, மற்றும் இதர மீன்களை அளிப்பதன் மூலம் மனிதகுலத்துக்கும் உணவு மூலமாய், முக்கியமாய் புரதச்சத்துக்கு மூலமாய் விளங்குகின்றன.

பவளப்பாறைகள் பலவிதமாய் செயல்படுகின்றன. சூறாவளிக் காற்றுகளிலிருந்தும் அலைகளால் ஏற்படும் சேதங்களிலிருந்தும் நிலப்பரப்பைக் காப்பாற்றுகின்றன. அரிக்கப்பட்ட பவளப்பாறைகளும், பாறைகளில் வாழும் உயிரினங்களின் அரிக்கப்பட்ட ஓடுகளும் அனைத்து வெப்பமண்டல கடற்கரைகளின் மண்ணையும் உருவாக்கி உள்ளன. பவளப்பாறைகள் உறுதியான சூழல்மண்டலங்கள். ஆனால் அவை எளிதில் உடையக்கூடியவை.

இவை அழிபடும் காரணங்களில் மானுட நடவடிக்கைகளே முதன்மையானவை. மின் நிலையங்களிலிருந்து சூடாக்கப்பட்ட



கழிவுகளை வெளியேற்றுவது, உப்புநீக்கம் செய்யும் விசையகங்களிலிருந்து வெளியேற்றும் உப்புக்கழிவுகளின் அதிகரிப்பு, கன உலோகம் மற்றும் கதிர்வீச்சு, தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் அமைதிக் குலைவுகள் (அணுசக்தி விளைவுகள், கட்டுமானப் பணிகள் மற்றும் நில மீட்புப் பணிகள்) பவளப்பாறைகளின் அழிவுக்கு வழிவகுக்கின்றன.

உலகின் பவளப்பாறைகளில் 10% சீர்செய்ய முடியாத அளவுக்கு சிதைந்துள்ளன, 30%, 2015இற்குள் அழியும் நிலையில் உள்ளன. பாறை அடுக்குகள் அவற்றின் கல்சியம் காபனேற் படிமங்கள் சிதைவதால் பெரும் நீரரிப்பு, புயல் சீற்றம் ஆகியவற்றுக்கு எதிராகத் தாமளிக்கும் பாதுகாப்பைக் கொடுக்க வலுவற்றதாகின்றன. இதனால் கடற்கரைகளும், சதுப்பு நிலக் காடுகளைப் போன்ற தேங்கிய நீர் வாசஸ்தலங்களும் முன்னில்லாத அளவு வெப்பதட்ப மாறுதல்களால் பாதிக்கப்படும் நிலையில் உள்ளன. இவற்றிற்கு பெரும் அளவிலான விளைவுகள் இருக்க வாய்ப்புண்டு.

சமீபத்திய ஆய்வுகள் கடல் முன்பு நினைத்ததைவிட அதிக அளவில் காபனீரொட்சைடை உறிஞ்சிக்கொள்கிறது எனப் புலப்படுத்தி உள்ளன. இதனால் இன்னும் கலவரமடைய காரணம் உள்ளது. சமுத்திரத்தில் அமிலத்தன்மை அதிகரிப்பது பாறைகளின் கட்டமைப்பையே மாற்றி, அவற்றின் வளர்ச்சி, கடினமாகும் வேகம் மற்றும் பெருக்கத்தை குறைக்கக்கூடும்..

# திரிஷாவிற்கு டும்..டும்!



தமிழில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை முன்னணி நடிகையாக இருந்தவர் திரிஷா. புதுமுக நடிகைகளின் வரவால் தனக்கு சினிமா வாய்ப்பு குறைந்தாலும், அவ்வவ்போது முன்னணி நடிகர்களின் படங்களில் தலையை காட்டி வருகிறார். அந்த வகையில் சமீபத்தில் அஜித்துடன் மங்காத்தாவில் வந்தார். இப்போது சமர், ஜீவா படம் என்று தமிழில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் இவருக்கு வயது ஏறிக் கொண்டே போவதால் திருமணத்தை முடித்து விட அவரது பெற்றோர் முடிவு செய்துள்ளனராம். இதற்காக மாப்பிள்ளை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறதாம். என்ஜினீயர்கள், வெளிநாட்டில் வேலை பார்க்கும் டாக்டர்கள் என ஜாதகங்களை குவித்து வைத்து பொருத்தம் பார்க்கின்றனர். தெலுங்கு நடிகர் ஒருவரும் பரிசீலனை பட்டியலில் இருப்பதாக கூறப்படுகிறது. எது எப்படியோ விரைவில் திரிஷாவுக்கு டும்... டும்... இருக்கும் என்கின்றனர்.


# முதுமை ஊஞ்சலாடுகிறது?...

கமல்ஹாசனும் ரஜினிகாந்தும் அண்மையில் சந்தித்து நீண்ட நேரம் மனம் விட்டுப் பேசியிருக்கிறார்கள். கசிந்த விவரம் இதுதான்... கமல், ரஜினி இருவரின் கூட்டுத் தயாரிப்பில் ஒரு படம் உருவாகிறது. இதில் இருவரும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இணைந்து நடிக்கவுள்ளனர். 2013இல் படப்பிடிப்பு தொடங்குகிறது.

ரஜினியின் "கோச்சடையான்" படத்தின் பாடல் வெளியீட்டு விழாவை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பிரம்மாண்டமாக



நடத்த திட்டமிட்டுள்ளனர். ஏ.ஆர். ரஹ்மான் இசையில் ஐந்து பாடல்களை எழுதியுள்ளார் வைரமுத்து. இதில் ஒரு பாடலை ரஜினிகாந்த் பாடியுள்ளார். "கோச்சடையான்" படத்தைத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பும் உரிமையை மிகப் பெரிய தொகைக்குப் பெற்றிருக்கிறது ஜெயா டி.வி.



வாரம் ஒரு பாடசாலை

# கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்




## அறிமுகம்

பூர்வீகத்தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் வடமராட்சியின் மிகப்பெரிய பிரதேசமாகன கரவெட்டியும் ஒன்றாகக்கருதப்படுகின்றது. இங்கு இருக்கின்ற மக்கள் ஆழ்ந்த இறைபக்தி, கோயில் தொண்டுகள், தமது உடமைகளை சொத்துக்களை ஆலயங்களுக்கு தர்ம சாதனமாகக் கொடுத்தல் தமது குலதெய்வங்களின் குளிர்ச்சி கண்டு அகமகிழ்த்தல் ஆகமவழி நின்று வழிபடல் ஆகியவற்றை பன்னெடுங்காலமாக பின்பற்றிவருகின்றனர்.

அந்நியரின் வருகையின் பின்னர் ஆலயங்கள் இடிக்கப்பட்டு கிறிஸ்தவப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு சமூக ஒழுங்குகள் மாற்றம் கண்டுகொண்டிருந்த காலப்பகுதியில் கரவெட்டியில் வசதியுடன் வாழ்ந்தவர்களில ஒருவரான வாழையப்பா வீட்டு நல்லதம்பி பெரியார் 1901 ஆம் ஆண்டு தனது காணியில் கொட்டில்அமைத்து மாணிக்கவாசகர் வித்தியாலயத்தை உருவாக்கினார்.

இன்று 'உயர்வுதரும் கல்வி' என்ற மகுட வாசகத்துடன் ஆண்டு ஒன்று முதல் ஐந்து வரை 138 ஆண்கள் 150பெண்கள் என 288 மாணவர்களுடன் முன்னணி ஆரம்பப் பாடசாலையாக செயற்பட்டு வருகின்றது. 111 ஆண்டுகள் கல்விப் பாரம்பரியம் கொண்ட இப்பாடசாலை பல அறிஞர்களின் உருவாக்கத்திற்கு அத்திபாரமாக இருந்துள்ளது இன்றும் இருந்து வருகின்றது.

## பழைய மாணவர் பேராசிரியர் சிவத்தம்பி



மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் பழைய மாணவர்களில் ஒருவரான மறைந்த தமிழ் அறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் பாடசாலை பற்றிய தனது அனுபவத்தை கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்...

பின்னோக்கிப் பார்க்கும் பொழுது மாணிக்கவாசக வித்தியாலயம் என்னிடத்துச் சொல்லாமல் சொன்ன சேதி... திணிக்காமல் ஊட்டிய தகவல் என் நண்பர்களுள்/என் வகுப்பில் நானும் ஒருவன்... சக மாணவன் என்னிடத்திருந்தும் சில விடயங்கள் எதிர்பார்க்கப்படலாம்... அதற்கு நான் தயாராக இருக்க வேண்டும் (சரியான வேளையில் வேட்டியைச் சரி செய்வதிலும் பார்க்க பணியைச் செய்யவேண்டும்.)


குழந்தையாக அங்கு சென்றேன். விலகியதும் ஏறத்தாழக் குழந்தையாகத்தான். ஆனால் முத்திரை குத்தப்பட்ட ஒரு குழந்தையாகவே வந்தேன்... அது எனக்கு மாத்திர மல்ல... எல்லோர் மீதும் விழுந்த முத்திரை... இன்றும் அந்த எழுத்துக்கள் மறையவில்லை.

## பாடசாலை அதிபர் ஆற்றிய சேவைகள்




2001 oct 13இல் திரு .இ.இராகவன் அவர்கள் அதிபராக பதவியேற்றார் பதவியேற்ற காலம் தொடக்கம் இன்றுவரை பாடசாலைக்காக தன்னை அர்ப்பணித்து கடமையாற்றுகிறாா இவர் 8 பரப்பு காணி வாங்குவித்தார் 100 நீளத்திலும் 25 அகலத்திலும் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது 500 மீற்றர் தூரத்தில் இருந்து பாடசாலைக்கான குழநீர்த்திட்டம் அமைக்கப்பட்டது. மின்சார வசதி செய்யப்பட்டது. பாடசாலையைச் சூழ மதில் அமைக்கப்பட்டது. திறந்த நிலையிலும் உடைத்த நிலையிலும் காணப்பட்ட வகுப்பறைகள் புனரமைக்கப்பட்டு அடைக்கப்பட்ட வகுப்பறைகளாக மாற்றப்பட் டது. கணினி வசதி நூலக வசதி செய்யப்பட்டது. நவீன மலசல கூட வசதி அமைக்கப்பட்டது. பாண்ட் அணி உருவாக்கப்பட்டது. கடந்த ஏழு வருடங்களாக புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூழய மாணவர்கள் சித்திய டைந்தார்கள் 2007ஆம் ஆண்ழல் தேசிய மட்டத்தில் முன்னணிப்பாடசாலையாக தெரிவுசெய்யப்பட்டது. 2004 ஆம் ஆண்ழலிருந்து தமிழ்த்தினப் போட்ழயில் மாகாண மட்டம் வரை மாணவர்கள் சென்று பதக்கங் கள் பெற்றனர். 2009 இல் மாகாண மட்டத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசில்களை இப்பாட சாலை மாணவர்கள் தட்ழச் சென்றனர் தரம் - 01 இல் இருந்து ஆங்கில மொழியை மாணவர்களுக்கு சிறந்த முறையில் பெற்றுக்கொடுப்பதற்காக மிகச் சிறந்த வழி முறைகள் கையாளப்படுகின்றது.

இப்பாடசாலை அதிபரை பொறுத்தவரையில் பாடசாலைக்கான அர்ப்பணிப்பை விட அவர் பிறந்த ஊரான கரவெட்ழ மககளுக்கும் அளப்பரிய சேவைகள் செய்து வருகின்றார். கரவெட்ழ அபிவிருத்தி ஒன்றியத்தின் உபதலைவர் கரவெட்ழ வைத்தியசாலை அபிவிருத்து குழு உறுப்பினர் கரவெட்ழ வெல்லன் விநாயகர் ஆலய உபதலைவர் இத்தகைய பல சேவைகள் ஆற்றி வருகின்றார்.



23.06.2012 வடமராட்சி வலயத்தில் நடைபெற்ற ஆங்கிலபாட பரீட்சையில் சித்தியடைந்த 147 மாணவர்கள்.



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுடன்...

**அதிபர்:**
திரு.இளையதம்பி இராகவன்

**ஆசிரியர்கள்:**
திருமதி சுமதி மகேஸ்வரன் , திருமதி கோமதி சிவகுமார்
திருமதி ஜெயந்தி கலைச்செல்வன், திருமதி கமலாவதி குலேந்திரன், திருமதி புஸ்பரதி இராகவன், செல்வி வசந்தகுமாரி ஆழ்வார், திருமதி சுதர்சினி தனீஸ்குமார்
திருமதி வசந்தி முருகானந்ததாஸ், திருமதி பாலநாயகி தர்மரத்தினம், திருமதி அனந்தினி பாஸ்கரன்
திரு. கந்தசாமி செந்தில்ராஜா, திரு. சுப்பிரமணியம் தனரூபன்

**தொண்டர்ஆசிரியர்:**
செல்வி அனுசுயா கனகரட்ணம், செல்வி கௌரி சரவணமுத்து
திருமதி பத்மலோஜினி ஸ்ரீநந்தபவான்
திருமதி விஜிதா சுதர்சன், திருமதி திருச்செல்வி ஜீவராசா
திருமதி சுதர்சினி பிரசன்னகுமார்
செல்வி லக்ஸியா பரமேஸ்வரன்




# சட்ட விரோதமான முறையில் மாட்டிறைச்சி விற்பனை

(சிகரம்)

யாழ்ப்பாணத்தில் இறைச்சி வெட்டப்படும் கொல்களம் பரிசோதகர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை வேலைப் பகிஷ்கரிப்பில் உள்ளபோது, சட்ட விரோதமான முறையில் பசுமாடு வெட்டி குருநகர் சின்னக்கடைப் சந்தையிலுள்ள இறைச்சிக் கடை ஒன்றில் விற்கப்பட்டுள்ள தாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த சந்தையில் இவ்வாறு சட்டவிரோதமாக பலமுறை பசுமாடுகள் கொல்லப்பட்டு, அதன் இறைச்சிகள் விற்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத் தியிருந்தபோதும் அவர்கள் இதனை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இன்று கொல்களம் உத்தியோகத்தர்கள் வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் இறைச்சிக்கடை கள் அனைத்தும் பூட்டப்பட்டு இருந்தன. ஆனால் சின்னக்கடை சந்தைப் பகுதியிலுள்ள ஒரு இறைச்சி வியாபாரி மட்டும் சட்ட விரோதமாக வெட்டிக் கொண்டுவந்த பசுமாட்டு இறைச்சியை தனது கடையைப் பூட்டிவிட்டு கடைக்கு முன்னால் வைத்து 1 கிலோ 400 ரூபா வீதம் விற்பனை



செய்துள்ளார்.

இந்த சட்ட விரோத இறைச்சி விற்பனை தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத் தும் போதெல்லாம் தங்களுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்யுமாறு யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவு மற்றும் யாழ்.சுகாதார பணிமனை கேட்டு கொண்டதாகவும், இதன்படி, தம்மால் எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளபோதிலும், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட் டுகின்றனர்.

# நல்லூர் ஆலய வீதி காப்பெற்றாக புனரமைப்பு



(கிரு-சிகரம்)

வடக்கில் மிக வேகமாக திஅபிவிருத்திகள் நடை பெற்று வருகின்றன.

அந்தவகையில், இம் மாதம் நடைபெறவுள்ள யாழ் நல்லூர் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, ஆலயத்தின் சுற்று வீதியும் துரித கதியில் காப் பெற் வீதியாக மாற்றப்பட்டுள் ளது.

வடமாகாணத்தின் துரித அபிவிருத்தி மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்ட ஆலய சுற்று வீதி, தற் போது 14 மீற்றர் அகலிக்கப் பட்டு, காப்பெற் இடப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப் பட்டுள்ளது.

ஓகஸ்ட் 24ஆம் திகதி ஆரம் பமாக உள்ள நல்லூர் திரு விழாவை முன்னிட்டு ஆலயச் சூழல் யாழ் மாநகரசபையால் அழகு படுத்தப்பட்டு வருகிறது

இதனையடுத்து, யாழ் மாந கரசபை, நல்லூர் ஆலய திரு விழாவுக்கு முன்னர் நல்லூர் ஆலயச் சுற்றுப்புற வீதிகளை மிக வேகமாக அபிவிருத்தி செய்து தருமாறு வீதி அபிவி ருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்ததைய டுத்தே இந்த வீதி மிக வேகமாக காப்பெற் வீதியாக மாற்றப்பட் டுள்ளது.

# கணித பாட ஆசிரியர்களுக்கு திறன்விருத்திச் செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய கணிதபாட ஆசிரியர்களுக்கான கேத்திர கணித திறன் விருத்திச்செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கரணவாய் பொன்னம்பல வித்தியாலய கணித மூல வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வுக்கு வடமராட்சி வலய பாடசாலைகளில் கணிதம் கற்பிக்கும் இருவரை மட்டும் தவறாது அனுப்பிவைக்கு மாறும் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் தரம் 11 இற்கான கணிதபாட செயற்திட்ட மதிப்பீடு ஒன்றின் புள்ளிவிபரங்களை செயலமர்வுக்கு வருகைதரும் ஆசிரியர்கள் தவறாது கொண்டு வரவேண்டும் மேலும் தரம் 11 மாணவர்களுக்கான கணித பிரிவு நடத்தும் முதலாவது மதிப்பீடு எதிர்வரும் 17 ஆம்திகதி பாடசாலை களில் நடத்தப்படவேண்டும் அதற்கேற்றவகையில் அவர்களுக்கான வினாப்பொதிகள் செயலமர்வில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி தெரிவித்துள்ளார். (109)

# மருத்துவ குணமுடைய ஊறணி ஊற்று தண்ணீர்



(சிகரம்)

பொலிகண்டி ஊறணி வைத் தியசாலைக்கு வடக்கே கடலு டன் இணைந்து காணப்படுகின் றது இந்த ஊறணிஊற்று. மழை காலத்தில் இந்த ஊற்றிலிருந்து தண்ணீர் சீறிப்பாயும் காட்சியைக் காண்பதற்கு வருகை தருபவர் களின் எண்ணிக்கை ஏராளம். இந்த நீருக்கு சிரங்கு, வாதம் போன்ற நோய்களைத் தீர்க்கும் மருத்துவ குணம் உள்ளதால் ஏராளமானவர்கள் இங்கு நீராடி யும் செல்கின்றனர்.

# புதிய நிர்வாகத் தெரிவு

(வடமராட்சி)

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் கடந்த வியாழக்கிழமை காலை 11மணி யளவில் நடைபெற்றது.இதில் புதிய நிர்வாக சபை தெரிவுசெய் யப்பட்டது. தலைவராக சி.சிவகுமார்,உபதலைவராக செ.காந்தராசா, செயலாளராக கா.குணராசா ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.ரஜினிகாந்,தி.மயில்வாகனம், மு.தேவ ராசா,சி.சந்திரலிங்கம்,ப.அல்வின்,சு.சின்னராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத்தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மீண்டும் தலைவராக செ.செல்வராசா தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவரர் களாக த.நிசாந்தினி, செ.அனுசா,செயலாளராக ம.துவாரகன் உப செயலாளராக க.ரதீசன், பொருளாராக த.செல்வராசா,போசகராக பாடசாலை அதிபர் பி.சந்திரபாபு ஆகியோரும் நிர்வாக சபை உறுப் பினர்களாக 5பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (116)

# பதிவிறக்கப் பெட்டகம்

தினந்தோறும் பத்திரிகைகளில் உளவாளி கொலை, பத்திரிகையாளர் வெட்டிக் கொலை, கடத்தப்பட்டவர் சடல மாக மீட்பு என பல்வேறு விதமாகத் தகவல்கள் நமக்குள் சேகரமாகின்றன. இப்படி நடந்துகொள்ள 'இனத்தின் விடு தலை' என்ற கருத்து அவர்களுக்கு அனுமதி வழங்குவ தாகச் சொல்லப்படுகிறது. இந்தக் குரூரங்களுடன் உடனி கழ்வாக சீருடையும், துப்பாக்கிகளும், அணிவகுப்பும் குறியீடு களாக நின்று நமக்கு நினைவுபடுத்தப் படுகின்றன. இவற்றை எதிர்த்தால் மரணம் என்பது உணர்த்தப்படுகிறது. கேள்வி கேட்டு சாவதை விடவும் மௌனமாக இருந்து உயிர்வாழ்வதே புத்திசாலித்தனம் என்ற மதிப்பீட்டினிடையில் நாம் வாழ்கி றோம். சீருடையினர் நம்மைக் காப்பதற்காகப் புறப்பட்டவர் கள்; இந்த அதிகாரம் நமக்கானது; அவர்களின் தண்டனை கள் எல்லாம் நம் விடுதலைக்கானவை என்ற (மூட) நம்பிக் கைகளில் அமிழ்ந்து கிடக்கிறோம். அச்சம் மண்டிய நமது மனம் அதிகாரத்தின் வரையறைகளை விதிமுறைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்கிறது. யாரும் ஒருவரை அடித் துக் கொன்றுவிட்டு "அவன் துரோகி" என்று சொல்வதே போதுமானதாக இருக்கிறது. துரோகியைக் கொல்லலாம்; விபச்சாரியை பாலியல் பலாதகாரம் செய்யலாம் என்பதை யெல்லாம் நமக்குள் உறைந்து கிடக்கும் ஒழுக்க மதிப்பீடு கள் ஒப்புக்கொள்கின்றன. – ரவிக்குமார்

அறிதலுக்கும், புரிதலுக்கும் இடையே இடைவெளி உண் டென்பதை நாம் அறிவோம், அதே போல பரிதலுக்கும், அறி தலுக்கும் இடையேயும் இடைவெளி உண்டு, பரிதலுக்கும் புரிதலுக்கும் இடையேயும் இடைவெளி உண்டு. பரிவென்பது ஓர் நடத்தையாகவே மாறுகையில் அம்மனிதர் தன்னள வில் ஆபத்தற்றவராகலாம், ஆனால் மானுட வாழ்வில் எண்ணி விட முடியாத் விளைவுகள் நல்லெண்ணத்திலி ருந்தும் கிளைக்கின்றன என்பதைக் கருதியே தீரவேண்டி இருக்கிறது. பரிதல் ஒரு பண்பாடாகவே, கூட்டத்தின் இயற் கைத் தேர்வாகவே ஆகுமென்றால் அந்தக் கூட்டம் எளிதில் சீர்குலைக்கப்படும் ஓர் கூட்டமாகும் என்பது இயற்கையின் பாடமாக எப்போதும் முன்னே நிற்கிறது. இது வரலாற்றி லும் பாடமாக முன்னே நிற்கிறது.

ஆனாலும், இறுதியில் மனித மிருகத்தைக் கட்டுப்படுத்த சாத்வீக சிந்தனைகள் அறநெறியாகப் போதிக்கப்பட்டுப் பழ வதைத் தாண்டி வேறு வழியில்லை என்றே தோன்றுகிறது. இந்த சாத்வீக சிந்தனைகளுக்கு முன்பு சரியான தர்க்க அடிப்படை இல்லாமல் இருந்திருக்கலாம். இன்று உடற்கூறு சார் சூழலியல் (Physiological Ecology) என்பது நன்கு வளர்ந் தால் அது ஒரு வலுவான தர்க்க அடிப்படையைக் கொடுக் கும் என்று தோன்றுகிறது.

ஜோர்க் ஸிம்மெலைக் (Georg Simmel) கேட்டால் உடனே தெரி விப்பார், 'அன்னியன்' ஆக்கப்படுவது எத்தனை எளிதானது என்று. அதைச் செய்யாத சமூகங்கள் வரலாற்றில் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் சொல்லித்தான் நமக் குத்தெரியும்என்றில்லை, ஆனால்அவர்தொகுததுச் சொன்ன பின் அதை ஒதுக்க நம்மால் முடியாமல் போயிருக்கிறது.


எனவே இந்த 'உண்மையை' அதன் பல நீர்த்த வடிவுகளி லாவது இன்று உலகெங்கும் நாம் அறிவோம்,

ஆனால் இந்த எளிய உண்மையை யாரும் அனேகமாக லட்சியம் செய்வது இல்லை.

அதே போல நாம் அனேக நேரம் அலட்சியம் செய்வது இன் னொன்று – அது, இலட்சிய வெறியர்களின் பெருநாயகர் களுக்கு யாரையும் 'அன்னியராக' ஆக்குவது எப்படி என் பது மிகச் சுலபமாகக் கைவரும் கலை, என்பது. அவர்கள் பெருநாயகர்களாவதே அந்தக் கொடும் கலையை அவர் கள் அறிவியல் போல வார்னிஷ் பூசிக் காட்டுவதில் வல்ல வர்கள் என்பதால்தான், ஆனால் அஃதொன்றும் நம்மை உறுத்துவதே இல்லை. ஏன் என்பது நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய ஒரு கேள்வி. – மைத்ரேயன்

தப்பு அர்த்தம் வந்துவிடக் கூடாதென்று நினைப்பதால் நான் சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்ல முடிய வில்லை. இந்த பூமியில் பிறந்தபின் தப்பிலேயிருந்து தான் தொடங்கணும். போராடத்தான் வேண்டும். வாழ் வைச் சிறுமைப்படுத்தும் இருளை விரட்டிக்கொண்டே இருக்க வேண்டும். – யு.ஆர்.அனந்தமூர்த்தி

# கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கான தேவைகளில் கவனம் செலுத்தப்படும்



(கொழும்பு)

கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கான பௌதீக வளங்கள் உள்ளிட்ட தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென பாரம்பரிய கைத தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் கடந்த ஒன்பதாம் திகதி இடம்பெற்ற 2012 - 2014 கல்வியாண்டுக்கான கற்கை நெறி தொடக்க விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த சமூகத்துக்காக நாம் முன்னெடுத்து வருகின்ற பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அனைவரது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் முக்கியமானது என்பதுடன், அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலேயே மக்களுக்கான பணிகள் முழுமையடையும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இக் கலாசாலைக்கான பௌதீக வளங்களை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, ஏனைய கோரிக்கைகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படுமென உறுதிமொழி வழங்கினார்.

ஆசிரிய மாணவர்களினது தற்போதைய சம்பள அதிகரிப்பு தொடர்பில் தாம் துறைசார்ந்தோர் ஊடாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இந்நிலையில் கலாசாலைக்கான புதிய விரிவுரையாளர்களை உள்வாங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வளாகத்தில் அமைந்துள்ள வீரமணி ஐயர் கலையரங்கத்தில், அதிபர் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்த வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அதிபர், மாணவர் ஒன்றியத் தலைவர் சிவரூபன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். 500 ஆசிரிய மாணவர்கள் தற்போது கலாசாலையில் கல்வி பயின்று வரும் நிலையில் இங்குள்ள பௌதீக வளங்கள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வின் போது கலாசாலை சமூகத்தினரால் அமைச்சர் அவர்களுக்கு அதிபர் கணபதிப்பிள்ளை பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசளித்தார்.

இதன்போது யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் கோப்பாய் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவருமான ஐங்கரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவருமான ரவீந்திரதாசன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கில் 109 பாடசாலைகள் மூடிக்கிடக்கும் அவலம்

(கொழும்பு)

இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 11 வீதமான பாடசாலைகள் இராணுவத்தினரின் தேவைக்காக மூடப்பட்டுள்ளதாக அந்த மாகாண ஆசிரியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். யுத்தம் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இலங்கை அரசாங்கம், வடமாகாண பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய போதுமான தலையீடுகளை மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

போருக்கு பின்னர், வட பகுதியில் உள்ள பாடசாலைகளை மேம்படுத்துவதற்காக அரசசார்பற்ற நிறுவனங்களும், புலம் பெயர் தமிழர்களுமே உதவி செய்தனர் எனவும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அடிக்கடி வந்து வாக்குறுதிகளை மாத்திரம் அள்ளி வழங்கி விட்டு சென்றதாகவும் வட மாகாண ஆசிரியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தல் உள்ள 491 பாடசாலைகளில் 67 பாட சாலைகளும், வவுனியா மாவட்டத்தில் உள்ள 107 பாடசாலைகளில் 14 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 112 பாடசாலைகளில் 18 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 126 பாடசாலைகளில் 7 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் உள்ள 197 பாடசாலைகளில் 3 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. மொத்தமாக இந்த மாவட்டத்தல் 109 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்டுள்ள பாடசாலைகளில் பல பாடசாலைகள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ளன.

# சுகாதாரப் பணிப்பாளராக இருவர் நியமனம்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் மாகாண சுகாதார பணிப்பாளராக இருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், டாக்டர் வி.சுபசிங்கவையே மாகாண சுகாதார பணிப்பாளராக தான் அங்கீகரிப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மாகாண சுகாதார பணிப்பாளர்களாக இருவர் நியமிக்கப்பட்டுள்ளதால் சுகாதாரதுறையில் பல நிர்வாக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர் சாந்தி சமரசிங்கவை மாகாண சுகாதார பணிப்பாளராக தாம் அங்கீகரிக்கவில்லை எனவும் அச்சங்கம் தெரிவிததுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையாக இந்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது எனவும் சகல வைத்தியர்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் நவனி டி சொய்ஸா கூறினார்.

இதேவேளை, யாழ் வைத்தியசாலையில் வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தாம் கலந்துரையாடவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# 982 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் குடிநீர்த்தாங்கி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மீண்டும் 982 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் தாங்கியொன்று அமைக்கப்படவுள்ள[illegible] இதன் ஆரம்ப கட்ட வேலைத்திட்டங்கள் கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ளது.

இங்கு குடிநீர் தாங்கி முதன் முதலில் 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது மீண்டும் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1996 ஆம் அழிவிற்குள்ளாகியிருந்தது.

அதனைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு இந் நீர்த்தாங்கி மீள அமைக்கப்பட்டது. அதனையடுத்து 2009 ம் ஆண்டு வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட கோர யுத்தத்தினால் மீண்டும் [illegible] அழிவுக்குள்ளாக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தற்போது மீள்குடியேறிய மக்கள் நீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந் நிலையில் அப்பகுதியில் குடிநீர் தாங்கியொன்று அமைப்பதற்கு ஜப்பான் நாட்டின் ஜய்க்கா நிறுவனம் முன்வந்துள்ளது.

# வவுனியா பிரதேசத்தில் 26 முதியோர் சங்கங்கள்

(கொழும்பு)

வவுனியா பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் 26 முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு உதவியாளர் அ.பிரகாசினி தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் 26 முதியோர் சங்கங்கள் கடந்த இரு வருடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.. முதியோர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ள இச்சங்கங்களின் மூலம் முதியோர்கள் தங்களது பிரச்சினைகளை பிரதேச செயலகத்திற்கு தெரிவித்து உரிய அதிகாரிகளின் உதவியுடன் உடனடியாகவும் படிப்படியாகவும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

இதற்கான முயற்சிகளை பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றனவெனவும் அவர் கூறினார்.

முதியோர்களின் நலன் கருதி வவுனியாவில் அண்மையில் பட்டானிச்சூர், வேலங்குளம், கந்தபுரம், தோணிக்கல், வெளிக்குளம், நெளுக்குளம், காத்தார் சின்னக்குளம், இராசேந்திரன் குளம், செக்கடிப்புலவு ஆகிய பிரதேசங்களில் முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# திருகோணமலையில் சட்டவிரோத பிரசாரம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான வேட்பு மனு தாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், பிரதான அரசியல் கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு முன்னர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி, வேட்பாளர்களின் பதாதைகள், அவர்கள் போட்டியிடவுள்ள தேர்தல் சின்னங்களை அவர்கள் பயணிக்கும் வாகனங்களில் காட்சிப்படுத்தியுள்ளனர், வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு முன்னர் வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடு படுவது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறும் செயல் என கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

# வைத்தியர்கள் சுகவீன விடுமுறை

(கொழும்பு)

ஐ.டி.எச் என்ற அங்கொடை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் நேற்று சுகவீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நிருவாக பெண் உத்தியோகத்தர் ஒருவரின் சில செயற்பாடுகளுக்கு எதிரபபு தெரிவிக்கும் வகையில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, சம்பந்தப்பட்ட பெண் உத்தியோகத்தருக்கு இடமாற்றம் வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள போதிலும், அது நிறைவேற்றப்படவில்லை என அந்த வைத்தியர் குறிப்பிட்டார்.

# மனித உரிமைகள் குறித்து பாடம் நடத்த முடியாது

(கொழும்பு)

மனித உரிமைப் பாதுகாப்பு மற்றும் சட்டங்கள்தொடர்பில் எவரும் பாடம் நடத்த முடியாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மனித உரிமை விவகாரங்களில் எவரும் ஆசிரியரோ எவரும் மாணவரோ கிடையாது.

மலை உச்சியை அடைவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்டபல்வேறு வழிகள் காணப்படுகின்றன என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்

ஆசிய கலாசாரத்தின் அடிப்படையில் நாம் எவரையும் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. தரமான நடைமுறைச் சாத்தியமுடைய திட்டங்களை முன் வைப்பதே எமது நோக்கமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பின்வரும் குறுக்கெழுத்துக்களில் வெற்றுப் பெட்டியில் வரவேண்டிய எழுத்துக்களை பூரணப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1 ம | | 2 ச் | 6 (shaded) |
| 5 | ளை | | (shaded) |
| 3 | ள | ஆ | (shaded) |
| 4 தே | | | 7 |
| 5 கி | | (shaded) | ணை |

**இடமிருந்து வலம்**

3) தென்னை கமுகு மரங்களின் இளமைப்பெயர்

1) நெல்லின் வித்துக்குவியலின் மரபுப்பெயர்

2) பலாப்பழத்தின் உள்ளிட்டு மரபுப்பெயர்

4) சரீரம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

5) செல்லப்பிராணி ஒன்று

8) இரும்பினால் ஆன இழைவடிவப் பொருள்

**மேலிருந்து கீழ்**

2) ஆந்தை .................................................................. சத்தம் கேட்டது

6) நோயாளி என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................................................

7) கலை என்பதன் எதிர்ப்பதம் ..................................................

8) உருவங்களைச் செய்வதற்கு ஏற்ற பொருள்? ..................................................

**சுருக்கமான விடை தருக**

1) தோற்கருவிகள் இரண்டினை எழுதுக.


1. ....................  2. ....................

2) 550 cm = ☐ m + ☐ cm

3) ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை என்ற பாடல் எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?

..................................................

4) இந்த இசைக்கருவியின் பெயரென்ன?



5) இசைக்கப்படக்கூடிய ஏழு சுரங்களும் எவை?

12) நானும் எனது நண்பன் மயூரனும் பாடசாலைக்கு காலை 7.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டோம். பாடசாலை மிக அண்மையில் இருப்பதால் நடந்தே செல்வோம் ஒரு நாள் வீதியை மஞ்சட் கோட்டால் கடக்கும்போது மோட்டார் வண்டியொன்று எனது நண்பனுடன் மோதியது................ மேலும் நடந்த சம்பவத்தை நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வசனங்களில் பூர்த்தி செய்க.

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

நேரம் 1-15 நிமிடம்

கல்வி முரசு

வெளியீடு 91



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

(1) பின்வரும் பந்தியை வாசித்து அதில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

மழைக்காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்தது போலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்து இருக்கும். நதிகளிலோ குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்க பதுங்கிப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நல்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பனவற்றைச் சுவைத்து உண்டு பருத்த பன்றிகளோடு, மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக்கூட்டம் நதிக்கரையில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

(1) மரங்கள் எவ்வாறு காட்சியளிக்கின்றன?

..................................................

(2) நீர் எவற்றில் நிறைந்திருக்கும்?

..................................................

(3) களிறு என்பது எந்த விலங்கைக் குறிக்கும்?

..................................................

(4) பன்றி, மான் எவற்றை உணவாக உண்ணுகின்றன?

..................................................

(5) பந்தியில் உள்ள இணைமொழி தருக?

..................................................

(6) அடுக்கு மொழி ஒன்று தருக?

..................................................

(7) தண்மை என்பதன் ஒத்தசொல் தருக?

..................................................

(8) வனங்கள் என்பதன் எதிர்க்கருத்துச் சொற்கள்?

..................................................

(9) ஆரவாரம் என்பதனாற் கருதப்படுவது யாது?

..................................................

(10) இங்கு காணப்படும் விலங்குகள் மாமிச உண்ணிகளா? அல்லது தாவர உண்ணிகளா?

..................................................

கீழ்பரும் ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

1) 6 பப்பாசிப்பழங்களின் விலை 120.00 ஆகும். ரூபா 180.00 இற்கு எத்தனை பழங்கள் வாங்கலாம்.

..................................................

2) பயணம் ஒன்றிற்கு 8 மணி 45 நிமிடம் எடுக்கின்றது பயணம் முடிவுற்ற நேரம் பிற்பகல் 3.30 எனின் அப்பயணம் தொடங்கிய நேரம் யாது?

..................................................

3) 4.5 லீற்றர் எண்ணெயைக் கொண்டு எத்தனை 75 மில்லி லீற்றர் கொண்ட போத்தல்களில் அடைக்கலாம்?

.............................................................................................

4) செவ்வகம் ஒன்றின் நீளம் அகலத்தைப்போல நான்கு மடங்காகும். அதன் நீளம் 24 உ.அ எனின் அதன் அகலம் யாது?

.............................................................................................

5) 47 உரோமன் இலக்கத்தில் எழுதுக?

.............................................................................................

6) பிற்பகல் 9.45 என்னும் நேரத்தை 24 மணித்தியால கடிகாரமாக நேரமாக எழுதுக?

.............................................................................................

7) 99100 - [ ] = 804

8) 260 கிராம் கோதுமை மாவினால் பாணொன்றைத் தயாரிக்கலாம் எனின், 180 பாண்கள் தயாரிப்பதற்கு எவ்வளவு கோதுமை மா தேவை?

.............................................................................................

9) 915 தேங்காய்கள் சம எண்ணிக்கையுள்ள மூன்று குவியல்களாகப் பங்கிடப்பட்டன. ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................

10) ஒரு வியாபாரி ரூபா 3.50 வீதம் 15 முட்டைகளை வாங்கினான் அவற்றில் 3 முட்டைகள் பழுதாயின் மீதியை ஒன்று 4.50 வீதம் விற்றால் அவனுக்கு கிடைக்கும் மொத்தப்பணம் எவ்வளவு?

.............................................................................................

## கீழேயுள்ள அட்டவணையின் முதலாவது கூட்டில் காட்டப்பட்டுள்ள பொருத்தமான விடை இலக்கத்தை தெரிவு செய்து இரண்டாவது கூட்டில் எழுதுக.


| சம்பவம் | விடை இல | விடை |
|---|---|---|
| 1) கிராமத்தில் ஏற்படும் சிறு சச்சரவுகளை தீர்த்து வைத்தல். | ............... | 1) கூட்டுறவுச் சங்கம் |
| 2) மாவட்ட நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர். | ............... | 2) கிராமசேவகர் |
| 3) தொற்றுநோய்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள். | ............... | 3) பொதுசன சுகாதார அதிகாரி |
| 4) வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவி பெற்றுக்கொடுத்தல். | ............... | 4) அரசாங்க அதிபர் |
| 5) மக்களுக்குத் தேவையான பொருட்களை சகாய விலையில் பெற்றுக்கொடுத்தல். | ............... | 5) பாடசாலை அபிவிருத்தி சபை |
| 6) பாடசாலையில் நடைபெறும் வைபவங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் | ............... | 6) சமுர்த்தி முகவர் |



## பின்வரும் தாவரங்களின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(பப்பாசி, நாகதாளி, பொன்னாவரசு, வாழை, கறிவேப்பிலை. பயற்றங்காய்)

4)



1) .................. 2) ..................3) ..................4) ..................

5)
(1) අට அட்ட ......................
(2) පාඩම (பாடம) ..................
(3) පාසල (பாசல) ..................
(4) පතොල (பதோல) ..................

6) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் பொருளை தமிழில் எழுதுக

1) RED .................. 2) DUSTER .................. 3) BANANA..................


4) GOAT .................. 5) NOSE ..................

பின்வரும் சமிக்ஞைகள் எதனை உணர்த்துகின்றன என எழுதுக
(ஒலி எழுப்பத்தடை, புகைத்தல் கூடாது, முன்னால் சிறுவர் கடவை, முன்னால் வழிவிடவும், பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை, பாதுகாப்பான புகையிரதக்கடவை)


7)



8) மண்ணின் கூறுகளைக் குறித்துக் காட்டுக




9) பின்வரும் கருவிகளின் பெயரினை எழுதுக.



# தமிழகத்திலிருந்து சிறுமிகள் அரபு நாடுகளுக்கு கடத்தல்

தமிழகத்திலிருந்து அரேபியா வளைகுடா நாடுகளுக்கு சிறுமிகளை கடத்தும் கொள்ளைக்கூட்டத்தை பிடிக்க தமிழக பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கோயம்புத்தூரைச் சேர்ந்த ஆனந்த் என்பவரது 6 வயது மகள், கடந்த 9ஆம் திகதி கடத்தப்பட்டார்.

இதுகுறித்து வழக்கு பதிவு செய்து சாய்பாபா காலனி பொலிஸார் சிறுமியை தேடினர். அப்போது, கேரளா பாலக்காடு ரயில்வே பொலிஸார், ஒரு சிறுமியை மீட்டு வைத்திருப்பதாக, தகவல் தெரிவித்தனர்.

உடனே பாலக்காடு விரைந்து சென்ற பொலிஸார் சிறுமியை மீட்டனர். மேலும், சிறுமியை கடத்தி சென்ற இருவரையும் கைது செய்தனர்.

சிறுமி கடத்தல் குறித்து பொலிஸ் அதிகாரிகள் கூறியதாவது: சிறுமியை கடத்திய சுப்பிரமணியம், இரண்டு ஆண்டுகளாக, கோவை பூ மார்கெட்டில் வேலை செய்கிறார்.

செல்வம், ஆறு மாதமாக, கோவையில் தங்கி, ஓட்டல்களில் வேலை செய்து வருகிறார். இருவரும் கூட்டு சேர்ந்து, பணத்துக்காக சிறுமிகளை கடத்தியுள்ளனர்.

இதற்காக, பள்ளிகள், பஸ் ஸ்டாண்ட், சினிமா தியேட்டர், ரயில்வே ஸ்டேஷன் போன்ற இடங்களில் தனியாக நிற்கும், 10 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை கண்காணித்து, கடத்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

வெளிநாட்டுக்கு கடத்தல்: கேரள மாநிலத்திலுள்ள பாலக்காடு, கொச்சி, திருச்சூர் ஆகிய இடங்களில், பெண் புரோக்கர்களிடம் சிறுமிகளின் அழகை பொறுத்து, 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரையிலும் விற்பனை செய்திருப்பதாக தெரிகிறது.

இதுவரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, 16 சிறுமிகளை, கேரள மாநிலத்தில் விற்பனை செய்திருப்பதாகவும் அதிர்ச்சி தகவல் வெளியானது.

சிறுமிகளை விலைக்கு வாங்கும் பெண் புரோக்கர்கள், சிறுமிகளை வீட்டு வேலைக்கு விட்டு, பணம் சம்பாதிக்கின்றனர்.

சிறுமிகள் வளர்ந்ததும், போலி முகவரியில், கடவுச்சீட்டு எடுத்து, சவூதி உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு அனுப்பி பணம் சம்பாதிப்பதாகவும் தெரிகிறது என்றார்.




# இந்திய அழகி மீது இங்கிலாந்தில் தாக்குதல்



இங்கிலாந்து தலைநகர் லண்டனிலிருந்து ஒளிபரப்பாகும் சனல்-4 என்ற தொலைக்காட்சி பிக் பிரதர் என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் பிரபலங்களை ஒரு பூட்டிய வீட்டுக்குள் தங்க வைத்து அவர்களின் நடவடிக்கைகள் ஒளிபரப்பப்படுகின்றன.

இதில், சமீபத்தில் தெரிவுசெய்யப்பட்ட இங்கிலாந்து வாழ் மிஸ் இந்திய அழகி தியானா அப்பல் கலந்து கொண்டார்.


அப்போது, இவருடன் கலந்து கொண்ட கனார் மிக் இன்டயர் என்ற வெள்ளைக்காரர், இந்திய அழகி தியானா அப்பல் மீது இனவெறி நடவடிக்கையை மேற்கொண்டார்.

அந்த இனவெறியை தாங்கிக் கொள்ள முடியாமல் அப்பல் மிகவும் வேதனை அடைந்தார். இனவெறி நடவடிக்கை அதிகமானதால், அதை தாங்க முடியாமல் அப்பல் அழுதார்.

இந்த நிகழ்ச்சி கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. அதை பார்த்த மக்கள் கோபமடைந்தனர்.

மிக் இன்டயர் மீது பெண்கள் சேரிட்டி அமைப்புகளை சேர்ந்த 1000 பேர் புகார் செய்தனர். பிக் பிரதர் நிகழ்ச்சியில் இருந்து அவரை வெளியேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

# இந்தியாவுக்கு யுரேனியம் அவுஸ்ரேலியா இணக்கம்





இந்தியாவுக்கு யுரேனியம் விநியோகம் செய்வது குறித்து அவுஸ்திரேலியா பரிசீலித்து வருவதாக அந்நாட்டு வெளிவிவகாரத்துறை அமைச்சர் பாப் கர் தெரிவித்தார்.

கம்போடிய தலைநகர் நாம்பென்னில் நடைபெறும் ஆசிய அமைச்சர்கள் மாநாட்டில் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவிடம் பாப் கர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு, இந்தியாவுக்கு யுரேனியம் விநியோகம் செய்ய முடியாது என அவுஸ்ரேலியா தெரிவித்திருந்தது.

தற்போது தங்களது முடிவை அமைச்சரவை மறு பரிசீலனை செய்து வருவதாக பாப் கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சில கொள்கை மாற்றம் செய்யப்பட்டு அது அமைச்சரவை ஒப்புதலுக்கு அனுப்பப்படும். பின்னர் விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.




கடந்த ஆண்டு டிசம்பரில் அவுஸ்திரேலியாவில் ஆளும் கட்சியாக உள்ள தொழிலாளர் கட்சியின் பிரதமர் ஜூலியா கிலார்ட், இந்தியாவுக்கு யுரேனியம் ஏற்றுமதி செய்வதில் இருந்த தடைகளை விலக்கி அதுகுறித்து நாடாளுமன்ற கூட்டத்திலும் விரிவாக பேசினார். ஆனால் இதற்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

# குழப்பத்தில் அமைச்சரவை மாற்றம்

(புதுடில்லி)

ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் மத்திய அமைச்சரவையில் முழு அளவில் மாற்றம் கொண்டு வர பிரதமர் திட்டமிட்டுள்ளார். குறிப்பாக பல்வேறு இலாக்காக்கள் காலியாக கிடப்பதால் யாரை எந்த பொறுப்பில் அமர்த்துவது என பெரும் குழப்பம் நிலவி வருகிறது. தகுதி வாய்ந்த நபரை தேடி எடுக்க காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகிகளுக்கு இரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மிகத்திறமை படைத்த பிரணாப்முகர்ஜி ஜனாதிபதியாக காங்கிரஸ் தேர்வு செய்யவிருப்பதால் இவர் கவனித்து வந்த நிதி அமைச்சகம் தற்போது பிரதமர் பொறுப்பில் இருந்து வருகிறது. சமீபத்திய இலஞ்ச தொடர்பான சி.டி.,யில் சிக்கிய இமாசல பிரதேசத்தை சேர்ந்த



வீரபத்திர சிங் பத்வியை இழந்தார். இதனால் சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் இலாகா காலியாக கிடக்கிறது. காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக்குழு தலைவர் பதவியும் காலியாக கிடக்கிறது. இதற்கும் ஆளை போட வேண்டியுள்ளது. பிரணாப் வகித்து வந்த நாடாளுமன்ற விவகாரதுறை காபினட் குழுவின் தலைமை பொறுப்பு வெற்றிடமாக உள்ளது,

இப்படி பல்வேறு பொறுப்புக்கள் வெற்றிடமாக இருப்பதால் சரியான ஆளை தேர்வு செய்ய காங்கிரஸ் வட்டாரம் முயற்சி செய்து வருகிறது.

# கர்நாடாக முதல்வராக ஷெட்டர் பதவியேற்பு



கர்நாடாக மாநிலத்திற்கு புதிய முதல்வராக ஜெகதீஷ் ஷெட்டர் நேற்று மதியம் 12 மணியளவில் பதவியேற்றுள்ளார்.

கர்நாடாக மாநிலத்தில் பா.ஜ.க ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் திடீரென ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக சதானந்த கௌடா தன்னுடைய முதல்வர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதைத்தொடர்ந்து ஜெகதீஷ் ஷெட்டரை அம்மாநிலத்திற்கு முதல்வராக நியமிக்க ஏற்கனவே அறிவித்துள்ளதன்படி நேற்று மதியம் 12 மணியளவில் அவர் பதவியேற்றார். இவருடன் 30 அமைச்சர்களும் பதவியேற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முதல்வர் பதவியை இராஜினாமா செய்த சதானந்த கௌடாவுக்கு தேசிய பொதுச்செயலாளர் பதவியும் அப்பதவியிலுள்ள அனந்த் குமாருக்கு மாநில தலைவர் பதவியும் அளிக்க பா.ஜ.க மேலிடம் பரீசீலனை செய்து வருகின்றது.

ஷெட்டருக்கு கர்நாடக மாநில ஆளுநர் பரத்வாஜ் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதனையடுத்து அசோக் குமார், பசவராஜ் பொம்மை உள்ளிட்ட 7 அமைச்சர்கள் குழுவாக பதவி ஏற்றுக் கொண்டனர். ஜெகதீஷ் ஷெட்டர் அமைச்சரவையில் அசோக்குமார் உள்ளிட்ட 31 பேருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.



ஒடிசா வந்த ,ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் பிரணாப் முகர்ஜியை வரவேற்க, புவனேஸ்வரத்தில் பழங்குடியினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு கொடுத்தனர்.

# நாட்டை ஆளும் தகுதி மன்மோகன்சிங்கிற்கு கிடையாது

பிரதமர் மன்மோகன் சிங் குறித்து டைம் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியின் பரபரப்பு அடங்குவதற்குள், யோகா குரு ராம்தேவ், பிரதமர் மன்மோகன் சிங் நாடாளும் தகுதியற்றவர் என்று கூறியிருப்பது மேலும் பரபரப்பை அதிகமாக்கியுள்ளது.

தனியார் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த யோகா குரு ராம்தேவ் கூறியதாவது, பிரதமர் மன்மோகன் சிங் குறித்து டைம் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி உண்மையானது தான் என்றும், சர்வதேச அளவில் இந்தியாவிற்கு இருந்த நற்பெயரை பிரதமர் மன்மோகன் சிங் களங்கப் படுத்தி விட்டார். பொதுவாழ்வில் நேர்மையானவர் என்று பெயரெடுத்த மன்மோகன் சிங்கிற்கு, அரசியல் ரீதியாக பண்புகள் இல்லை என்றே கூற வேண்டும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தவறான கொள்கைகளால், சர்வதேச அளவில் இந்தியாவிற்கு இருந்த நற்பெயர் களங்கப்படுத்தப்பட்டு விட்டது. இந்திய அரசிலமைப்பின் உயர்பதவியான பிரதமர் பதவியில் அமர்ந்திருக்கும் மன்மோகன் சிங், அப்பதவி குறித்த முழுமையான செயற்பாடுகளை அறியாத வண்ணம் உள்ளார். பொதுவாழ்வில் நேர்மையானவராக அவர் இருந்தபோதிலும், தனது அமைச்சர்களை கட்டுப்படுத்த இயலாதவராக உள்ளார். இதனால் நாடு, சீரழிவுப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்றார்.

# அகதிகளாக படகில் சென்ற 55 பேர் குடிநீர் இன்றி மரணம்

## - கடல் பயணத்தில் சோகம்

(ஜெனீவா)

இத்தாலிக்கு அகதிகளாக படகில் வந்த 55 பேர் குடிக்க தண்ணீர் கிடைக்காமல் உயிரிழந்தனர். மத்திய தரைக்கடல் பகுதியில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடல் நீரைக் குடித்து உயிர் பிழைத்த ஒருவர் அளித்த தகவலின் பேரில் 55 பேர் மரணமடைந்தது தெரியவந்துள்ளது.

லிபியாவில் இருந்து 56 பேர் படகு ஒன்றில் இத்தாலியில் அகதிகளாக தஞ்சமடைய வந்துள்ளனர். ஜூன் கடைசியில் இவர்கள் பயணம் மேற்கொண்டனர். படகு இத்தாலியை நெருக்கிய சமயத்தில், வீசிய புயல் காற்றில் சிக்கி படகு திசை மாறி மத்திய தரைக்கடல் பகுதிக்குச் சென்று விட்டது. இதனால் கரையை எட்ட முடியவில்லை.

திக்குத் தெரியாமல் கடலில் சில நாள்கள் பயணித்தனர். இந்நிலையில் படகில் இருந்த குடிநீர் தீர்ந்துபோனதால், அனைவரும் தாகத்தால் தவித்தனர். சிலர் கடல் நீரைக் குடித்து தாகத்தைத் தணிக்க முயற்சித்தனர். சிலர் நாக்கு வறண்டு மயங்கி விழுந்துவிட்டனர். இதனிடையே படகும் சேதமடைந்து, கடலில் மூழ்கத் தொடங்கியது. தண்ணீர் இல்லாமல் பாதி உயிரை விட்டிருந்தவர்கள், கடலில் மூழ்கி இறந்தனர்.

ஒருவர் மட்டும் படகின் உடைந்த பாகத்தைப் பிடித்துக் கொண்டு கடலில் தத்தளித்தார். டுனிசியாவைச் சேர்ந்த மீனவர்கள் அந்த நபரை கடந்த திங்கட்கிழமை மீட்டு கரை சேர்த்தனர். அவர் மூலமே 55 பேர் உயிரிழந்தது தெரியவந்தது.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கிழக்கு ஆப்பிரிக்க நாடான எரித்தியா, லிபியாவைச் சேர்ந்தவர்கள் என்று அவர் கூறியுள்ளார். லிபியாவில் புரட்சி ஏற்பட்ட பின்னர், இந்த ஆண்டில் மட்டும் 1,300இற்கும் மேற்பட்டவர்கள் இத்தாலியில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

# நாடாளுமன்றைக் கூட்டும் நடவடிக்கையை எகிப்து ஜனாதிபதி வாபஸ் பெறவேண்டும்

## நீதிமன்றம் அதிரடி

எகிப்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும் நடவடிக்கையை ஜனாதிபதி முகமது முர்சி வாபஸ் பெற வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எகிப்தின் ஜனாதிபதியாக கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த முபாரக், பொதுமக்களின் தொடர் போராட்டம் காரணமாக பதவி விலகினார்

இதனையடுத்து இடைக்கால அரசை இராணுவ உயர்மட்ட கவுன்சில் கவனித்துக் கொண்டது. இதனிடையே கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது.

இதில் தெரிவு செய்யப்பட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் முறைகேடாக வெற்றி பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்ததால், நாடாளுமன்றத்தைக் கலைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் புதிய ஜனாதிபதி முகமது முர்சி, தேர்தல் நடக்கும் வரை கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை மீறி எகிப்து நாடாளுமன்றம் மீண்டும் கூடியது. இதையடுத்து வழக்கறிஞர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

எனவே நாடாளுமன்றத்தைக் கலைக்க நாங்கள் இட்ட உத்தரவு தான் இறுதியானது, நாடாளுமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்யும் நடவடிக்கையை ஜனாதிபதி வாபஸ் பெற வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே ஜனாதிபதி முர்சியின் ஆதரவாளர்கள், கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் கூடி அரசுக்கு ஆதரவாக கோஷம் போட்டனர்.

உலகச் செய்திகள்

# ஆப்கானில் பெண்கள் போராட்டம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில், கள்ளக் காதலில் ஈடுபட்ட பெண்ணை, பொது மக்கள் மத்தியில், தலிபான்கள் சுட்டுக்கொன்ற சம்பவத்தைக் கண்டித்து, காபூலில் பெண்கள் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர். ஆப்கானிஸ்தானை, கடந்த 96ஆம் ஆண்டு முதல், 2001ஆம் ஆண்டு வரை, தலிபான்கள் ஆட்சி செய்தனர். அமெரிக்க தாக்குதலுக்கு பிறகு, தலிபான் ஆட்சி ஒழிக்கப்பட்டது. தற்போது, அதிபர் கர்சாய் தலைமையிலான ஜனநாயக ஆட்சி நடக்கிறது. இருப்பினும், சில பகுதிகளில், தலிபான்களின் ஆதிக்கம் நீடிக்கிறது.தலைநகர் காபூலிலிருந்து, 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது, பர்வான் மாகாணம்.

இங்குள்ள கிராமத்தை சேர்ந்தவர் நஜீபா(வயது -22) கள்ளக் காதலில் ஈடுபட்டதற்காக, நஜீபாவை, தலிபான்கள் ஒன்று கூடி, ஒரு மணி நேரத்தில், பொதுமக்கள் மத்தியில் உட்கார வைத்து சுட்டுக் கொன்றனர். இந்த பெண் கொல்லப்பட்டதும், சுற்றி இருந்த ஆண்கள், கை தட்டி ஆரவாரம் செய்தனர்.தலிபான்களின் இந்த கொடூரச் செயலுக்கு, அதிபர் அமீத் கர்சாய் கண்டனம் தெரிவித்திருந்தார். இருப்பினும், நஜீபாவை கொன்ற தலிபான்களை தண்டிக்க வேண்டும் எனக் கோரி, காபூல் நகரில் உள்ள பெண்கள் நல அமைச் சகத்தின் முன், ஏராளமான பெண்கள், நேற்று முன்தினம் போராட் டம் நடத்தினர்.ஆப்கன் பெண் எம்.பி.ஷின்காய் கரோகாய்ல், இந்த போராட்டத்துக்கு தலைமை வகித்தார். பின், இந்த பெண்கள் ஐ.நா.அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்று, மனு கொடுத்தனர்.

# தொடர் தாக்குதல் நடத்துவோம் மிரட்டல் விடுக்கும் தலிபான்கள்

பாகிஸ்தான் இராணுவத்தினரின் மீது தொடர் தாக்குதல் நடத்துவோம் என பயங்கரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளதாக பாகிஸ்தான் அரசை உளவுத்துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான், செனாப் ஆற்றுப்படுகையில் உள்ள இராணுவ முகாமின் மீது கடந்த 9ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர். அந்த இடத்தில் தீவிரவாதிகள் சில துண்டுக் காகிதங்களை விட்டுச் சென்றனர்.

அதில் பாகிஸ்தான் வழியாக ஆப்கானில் உள்ள நேட்டோ படையினருக்குத் தேவையான தளவாடப் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதைத் திரும்பப் பெற வேண்டும், இல்லையெனில் பாகிஸ்தானில் எங்கு வேண்டுமானாலும் இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

தலிபான் தொடர்பு தீவிரவாதிகளின் மிரட்டலை உளவுத்துறையும் உறுதி செய்ததாக தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன் என்ற பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

மற்றொரு உளவுத்துறை நிறுவனம் அளித்த செய்தியில், பிர் சாம்பல் பகுதியில் நடந்த தாக்குதலுக்குத் தடை செய்யப்பட்ட தெஹ்ரிக் இ தலிபான் தீவிரவாத இயக்கம் தான் காரணம். இந்த இயக்கம் மேலும் பல தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது.

பொலிஸாரிடமிருந்து மக்கள் விலகியே இருக்குமாறு தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பாகிஸ்தானில் எங்கு வேண்டுமானாலும் குறிப்பாக பஞ்சாப் மாகாணத்தில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தீவிரவாதிகளின் தாக்குதல் பிலிப்பைன்ஸில் 6பேர் பலி

(மணிலா)




பிலிப்பைன்ஸ் நாட்டில் இஸ்லாமிய தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் அங்குள்ள பாசிலன் தீவில் அமைந்துள்ள இறப்பர் தோட்டம் ஒன்றில் வேலை செய்வதற்காக ஒரு லொரியில் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

அந்த வாகனம் மீது அல்கெய்தா ஆதரவு அபு சயாப் தீவிரவாதிகள் பதுங்கி இருந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர். 22 தொழிலாளர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்தத்தாக்குதலை இராணுவ செய்தி தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் ராண்டல்ப் காபாங்க்பாங்க் உறுதி செய்துள்ளார். இந்த தாக்குதலால் பாசிலன் தீவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# இரண்டாம் உலகப் போரின்போது கடலில் மூழ்கிய விமானம் கண்டுபிடிப்பு



இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட Heinkel He – 115 என்ற விமானம் 70 ஆண்டுகளுக்கு பிறகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரட்டை எஞ்சின் கொண்ட இந்த வகை விமானங்களை ஜேர்மனியிடமிருந்து நோர்வே வாங்கியது. கடந்த 1942ஆம் ஆண்டு ஒருநாள் கீழே இறங்கிய போது, கடலுக்கு அடியில் 120 அடி ஆழத்தில் மூழ்கிவிட்டது.

மூழ்கிய இந்த விமானத்தை நோர்வே கடலின் இடைகழியில் கடந்த 2005ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர். இதில் வெடிக்காத இரண்டு குண்டுகளும் இருந்தன. இவற்றை எடுத்து முதலில் செயழிக்கச் செய்தனர்.

நீரோட்டம் மற்றும் ஒக்ஸிஜன் வாயு குறைவாக இருந்த கடல்பகுதியில் இந்த விமானம் இருந்ததால், துருப்பிடித்து வீணாகவில்லை. உப்புப்படிந்து இருந்தாலும் புதிது போலவே இருந்தது.

இந்தப் பணிகளில் ஈடுபட்ட ஆலிவர் ஸ்காட், இந்த விமானத்தைப் பார்க்கும்போது நேற்று தொலைந்தது போலத் தோன்றுகிறது. நல்ல நிலையில் இருக்கின்றது. இதன் வால்பகுதியில் ஸ்வஸ்திக் சின்னம் பளிச் என்று தெரிகிறது என்றார்.

இந்த விமானத்தை மீட்ட பின்னர் ஸ்டாவென்கரில் உள்ள விமான அருங்காட்சியகத்துக்குக் கொண்டு வந்தனர். ஐந்தாகப் பிரித்து நல்ல தண்ணீர் தொட்டியில் அவற்றை மூழ்க வைத்தனர். இன்னும் இரண்டாண்டுகளுக்கு இந்த விமானத்தின் பகுதிகள் நல்ல தண்ணீரில் மூழ்கியபடி இருக்கும்.

இந்த ஸ்டாவென்கர் அருங்காட்சியகத்தில் அரிய விமானங்கள் பல உள்ளன. மெஸ் ஸெர்ச்மிட் BF – 109 G, இத்தாலியின் கேப்ரோனி வெடிகுண்டு வீச்சு விமானம், ஜேர்மனியின் ஏராடோ பயிற்சி விமானம் ஆகியவற்றின் ஹீக்கல் ரக விமானத்துக்கு மட்டுமே பொருத்தப்படும் Bஆறு எந்திரம் போன்றவையும் இந்த அருங்காட்சியகத்தில் உண்டு.

# அழகாய் இருக்கிறதாம் செவ்வாய் கிரகம்



செவ்வாய் கிரகம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா, செவ்வாய் கிரகம் தொடர்பான இரு புதிய புகைப்படங்களை வெளியிட்டுள்ளது. அதில் செவ்வாய் கிரகத்தின் தரைப் பகுதி மற்றும் கிரேட்டர் ஆகியவை மிக அழகாகக்காட்சி தருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் படங்கள் இரண்டும் வெளியிடப்பட்டன. கிரீலே பனோரமா என்று இதற்குப் பெயரிட்டுள்ளது நாசா.

செவ்வாய் கிரகத்தின் வின்டர் சீசனின்போது இந்தப் புகைப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ரோவர் விண்கலத்தைச் சுற்றிலும் உள்ள செவ்வாய் கிரகத்தின் தரைப் பகுதி முழுவதும் இதில் காட்சியாகியுள்ளது. நான்கு மாதங்கள் அந்த இடத்தில் ரோவர் விண்கலம் நிலை நிறுத்தப்பட்டிருந்தது. அதாவது 2011ஆம் ஆண்டு டிசம்பர் 21 முதல் 2012 மே 8ஆம் திகதி வரை இங்கு ரோவர் விண்கலம் நிலை நின்றிருந்தது.

# IOM நிறுவனத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கில் உப்பு அரைக்கும் ஆலை



வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உப்பு அரைக்கும் ஆலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உரையாற்றும் போது, கடந்த கால யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு நிறுவனங்களின் உதவிகள் தேவைப் படுகின்றன. அதனடிப்படையில் இந்தியாமற்றும் யப்பான் போன்ற பல நாடுகள் வடபகுதி அபிவிருத்திக்கு உதவிபுரிந்து வருகின்றன.

குறித்த பிரதேசங்களின் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி டக்ளஸ் தேவானந்தா அவர்களும் நாமும் எவ்வேளையிலும் எத்தகைய உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் IOM நிறுவன வடமாகாணத்திற்கான பணிப்பாளர் வேதாரணியம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த உப்பு அரைக்கும் ஆலை IOM நிறுவனத்தின் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# எமக்கு யாரும் பாடம் கற்பிக்க முடியாது

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

மனித உரிமைப் பாதுகாப்பு மற்றும் சட்டங்கள் தொடர்பில் எவரும் எமக்குப் பாடம் நடத்த முடியாது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். குறிப்பாக மனித உரிமை விவகாரங்களில் எவரும் ஆசிரியரோ அல்லது மாணவரே கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மலை உச்சியை அடைவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்டபல்வேறு வழிகள் காணப்படுகின்றன என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## மேற்குலகின்...

ஏற்படுத்த வேண்டுமென கோரும் தரப்பினர் மத்திய கிழக்கினதும் இலங்கையினதும் நிலைமைகளை கவனத்திற்கொள்ளத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு முன்னர், மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றியீட்ட எதிர்க்கட்சிகள் முனைப்பு காட்ட வேண்டியதுஅவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வடக்கில்...

பட்டிருந்தது. இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம், கடந்த வருடமே பூர்வாங்க விசாரணை செய்த பின்னர் சுற்றுநிருபத்தினால் விதிக்கப்பட்ட காலக்கெடு பறறிய ஏற்பாட்டுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த மனு நேற்று முன்தினம் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிர் மனுதாரர்களான காணி அமைச்சர், காணி ஆணையாளர் நாயகம், வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் காணி ஆணையாளர்கள் போன்றவர்களின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் யுவன்ஜன் விஜேதிலக மேற்படி சுற்றுநிருபத்தை முற்றாக விலக்கிக் கொள்ள அரசு தயார் என எழுத்தில் உறுதி தெரிவித்தார்.

இதனையடுத்து, தேவை எழுந்தால் இதுபோன்ற ஒரு வழக்கை மீண்டும் தாக்கல் செய்வதற்கான தமது உரிமையை பதிவு செய்து கொண்டு வழக்கை விலக்கிக்கொள்ள மனுதாரர் தயார் என மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் விரான் கொரயா, பவானி பொன்சேகா, றொஹான் குணதிலக ஆகியோரின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆஜரானார்.

## வடக்கில் தலையெடுக்கும்...

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், காங்கேசந்துறை, திருகோணமலை, புத்தளம் மற்றும் தம்புத்தேகம போன்ற பிரதேசங்களில் உருவாக்கப் படவுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார். இந்த பிரிவுகளில் உள்ளடக்கப்படும் நாய்களுக்கு வெடிபொருட்களை இனங்காணக் கூடிய பயிற்சிகள், போதைப்பொருள் கண்டுபிடிப்பு மற்றும் திருடர்களை அடையாளம் காணக்கூடியதான பயிற்சிகள் விசேடமாக வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை, மேற்படி பிரதேசங்களைத் தவிர, போதைப்பொருள் பாவனை அதிகமாகக் காணப்படும் பிரதேச தேடுதல் நடவடிக்கைகளுக்கு மேலதிக நாய்ப் படையினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களப்பின் நாய் படைப்பிரிவினை விரிவுபடுத்துவதன் மூலம் குற்றச்செயல்களைத தடுத்து நிறுத்தி பொதுமக்களுக்கு சிறந்தவொரு சேவையை வழங்க முடியும் என எதிர்ப்பார்ப்பதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

## அவுஸ்ரேலியாவிற்கு...

பிரிவினர், கடற்படையினரின் உதவியைக் கோரியுள் ளனர். இவர்களில் ஒரு கடற்படை சிப்பாய தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளார்.

திருகோணமலை உப்புவெளி பொது மயானத்திற்கு எதிரில் உள்ள கடற்பரப்பில் இருந்து அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முயற்சித்தபோது, கடந்த 9 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டவர்களை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பிவைக்கும் வர்த்தகத்தின் பின்னணியில் சில கடற்படையினர் இருந்துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

டிங்கி படகுகள் மூலம் சுமார் 8 கடல் மைல் வரை சென்று, அங்கிருந்து ஆழ் கடல் மீன்பிடிப் படகுகளில் ஏறி, இவர்கள் அவுஸ்ரேலியாவுக்கு செல்லவிருந்தனர். இந்தப் படகு குறித்து கடற்படையினர் 9 ஆம் திகதி இரவு தமக்கு அறிவித்திருந்தாகத் திருகோணமலை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முற்பட்ட 700 பேரை பொலிஸார் தடுத்துள்ளனர். கடல்வழியாகச் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்குப் படகு மூலம் செல்லமுற்பட்ட 700 பேரை காவல்துறையினரும், கடற்படையினரும் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 700 சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களைக் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோதமான முறையில் இலங்கையை விட்டுவெளியேற முற்பட்டவர்களில் 90 வீதமானவர்கள் தமிழர்கள் எனவும 8 வீதமானவர்கள் முஸ்லிம்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு படகுகளில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முற்பட்ட 82 பேரை அண்மையில் கடற்படையினர் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். சட்டவிரோத ஆட்கடத்தல் காரர்களின் பொறியில் மக்கள் சிக்கிவிடக்கூடாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கோரியுள்ளார்.

## இன்னும் ஓயாத...

அதிபரும் இவர்களுக்கான நியமன்ம் வழங்குவது அரசினால் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்நிலையிலே வேறு வழியின்றி அவரகள் நேற்று தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது ஸ்தலத்திற்கு விரைந்த யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன் பொது இடங்களில் இத்தகைய போராட்டங்கள் நடத்துவது குற்றம் எனவே இங்கிருந்து போராட்டக்காரர்களை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார். பொலிஸாருக்கும் பட்டதாரிகளுக்கும் இடையிலான ஒரு மணிநேரத்திற்கும் மேலானா தர்க்கத்திற்குப் பின்னர் அங்கிருந்து பட்டதாரிகள் வெளியேற மறுத்ததனைத் தொடர்ந்து கலகமடக்கும் பொலிஸார் ஸ்தலத்திற்கு வரவழைக்கப்பட்டனர். இந்நிலையில் யாழ். அரச அதிபரும் செயலகத்தில் இருக்கவில்லை. அவர் வேறு ஓர் நிகழ்விற்குச் சென்றிருந்தரர். பட்டதாரிகள் யாழ். அரச அதிபர் தமக்கு தமது நியமனம் குறித்து உறுதிமொழி வழங்கவேண்டும் என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பட்டதாரிகள் சார்பில் பிரதிநிதிகள் இன்று யாழ். அரச அதிபருடன் சந்தித்து இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடவுள்ளனர். இந்தப் பேச்சுக்கள் தோல்வியடையும் பட்டசத்தில் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகள் தமது பட்ட தாரி பயிலுனர் நியமனம் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்கள் சிலவற்றில் இவ்வாறானவர்களுக்கு அரசாங்கம் பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்கியிருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.(பா)

## கிழக்கு மாகாண...

உறுப்பினரும், ரெலோ உயர் அரசியல பீட உறுப்பினருமான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஸ்ரீகாந்தா திருகோணமலை மாவட்டத்தில் நியமிக்கப்பட வேண்டிய 13 வேட்பாளர்கள் தொடர்பில் இணக்கப்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுவிட்டது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளும் சேர்ந்து மொத்தம் நான்கு வேட்பாளர்களை நியமிப்பதற்குத் தமது கோரிக்கையின் கீழ் இறங்கி வந்துள்ளனர்.

அதே நேரத்தில் 17 வேட்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டிய அம்பாறை மாவட்டம் தொடர்பில் பிரச்சினைகள் எதுவும் எழவில்லை. ஆனால் 14 வேட்பாளர்கள் நியமிக்கப்படவே அண்டிய மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு 7, ஏனைய நான்கு கட்சிகளுக்கும் மொத்தம் 7 என்னும் அடிப்படையில் வேட்பாளர்கள் நியமிக்கப்படுவதை அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சில தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். இதனால் ஓர் முட்டுக்கட்டை நிலைமை இவ்விவகாரத்தில் ஏற்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருசில அரசியல் பிரமுகர்களின் மேலாதிக்க மனப்பாண்மையே இந்நிலைமைக்குக் காரணமாகும்

திருகோணமலை மாவட்டத்தில் பெருந்தன்மையுடன் சமரச உடன்பாடு கண்ட ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளில் சுயமரியாதை உணர்வையும் சுரண்டிப் பார்ப்பதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எவரும் ஈடுபடக்கூடாது. மட்டக்களப்பு மாவட்டத்தில 50 வீதமான வேட்பாளர்களைத் தமக்கு ஒதுக்குமாறு தமிழரசுக்கட்சி தலைமையிடம் ஏனைய நான்கு கட்சிகளும் கோருவது நியாயமானது. பலமான வேட்பாளர்களை இம் மாவட்டத்தில் நிறுத்தக் கூடிய நிலையில் இந்த நான்கு கட்சிகளும் உள்ளன.

ஒற்றுமையின் பேரால் தனியொரு அரசியல் கட்சியின் மேலாதிக்க உணர்வுக்கும் நாட்டாமை அரசியலுக்கும் மற்றக் கட்சிகள் எதுவும் அடிபணியும் நிலையில் இல்லை. அடுத்த ஒருவார காலத்திற்குள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ய வேண்டிய நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு அனாவசியமான சோதனை ஏற்பட்டிருக்கிறது.

எமது தலைமை வேட்பாளர் யார் என்பதும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அந்த வேட்பாளர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டும். வேறு எவரையும் எமது கட்சி ஆதரிக்கமாட்டாது எனத் தெரிவித்துள்ளார். (137)

## இலங்கையின்...

சுந்தரம் அருமைநாயகம் அவர்களும் வருகை தந்தார். இவர்கள் அனைவரும் வடதாரகை இரண்டு கப்பலில் நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் வந்து தரையிறங்கியதும் இவர்களை நெடுந்தீவுப் பிரதேச சபை தவிசாளரும், நெடுந்தீவு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளருமாகிய தானியேல் றெக்சியன் மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் மதகுருமார், அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், படைத்துறை அதிகாரிகள் என பலர் வரவேற்றனர் இந்நிகழ்வின்போது நெடுந்தீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் வருகை தந்தவர்கள் அனைவரும் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். இதன் பின்னர் கடற்படையினரின் அணிவகுப்பு நிகழ்வு இடம் பெற்றது. அதனைத்தொடர்ந்து யாழ். நெடுநதீவு றோமன் கத்தோலிக்க மகளீர் கல்லூரி மாணவிகளது பாண்ட்வாத்திய அணிவகுப்புடன் அவர்கள் அழைத்துவரப்பட்டு குதிரைப்பந்தய வீரர்களின் சகாச நிகழ்வுகளுடன் பிரதான வீதி வழியாக நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு அழைத்துவரப்பட்டனர். பிரதேச செயலக முன்வாசலில் விருந்தினர்கள் திலகமிடப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் யாழ். நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவிகளது வரவேற்பு நடனத்துடன் விருந்தினர்கள் பிரதேச செயலக மண்டபத்தினுள் நுழைந்தனர். இன்நிகழ்வுக்காக நெடுந்தீவுப் பிரதேச செயலகம் வரவேற்பு பதாகைகள் அமைத்து தோரணங்கள் தூக்கி விழாக்கோலம் பூண்டு காடசியளித்தது. பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் வருகைதந்த பிரதிநிதிகள் சார்பாக ஒருவர் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார் அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாவட்ட அபிவிருத்தக்கு கிடைத்த ஒதுக்கீடுகள் பற்றியும் நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திகள் பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறினார் அதனைத் தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் இவர்களது நெடுந்தீவு விஜயத்தின் நோக்கம் பற்றி எடுத்துக்கூறினார். இன்நிகழ்வின் ஒழுங்கமைப்பை நெடுந்தீவு பிரதேச செயலகத்துடன் இணைந்து மீள் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர்களும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சைச் சார்ந்த உத்தியோகத்தர்களும் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. வருகைதந்த அனைவரும் நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்ததுடன் நெடுந்தீவில் மீளக்குடிய மர்ந்த மக்களுடனும் கலந்துரையாடினர். மேலும இவர்கள் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் மதிய உணவு அருந்திவிட்டு பிற்பகல் 3.30 மணியளவில் நெடுந்தீவை விட்டு புறப்பட்டுச் சென்றனர்.

# விதிகளை மீறி தேர்தல் பிரச்சாரம் கஃபே அமைப்பு கண்டனம்

CAFFE

(கொழும்பு)

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்னரே தேர்தலுக்காக பிரசாரம் செய்வதை அனுமதிக்கும் தேர்தல் சட்டத்தின் குறைபாட்டை வேட்பாளர்கள் பயன்படுத்தி வருவதாக திருகோணமலை, கேகாலைப் பகுதி தேர்தல் கண்கானிப்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதேவேளை, தற்போது காட்சிப்படுத்தப்பட்டுவரும் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டியது சிவில் அதிகாரிகளினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் பொறுப்பாகும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பதாகைகளும் சுவரொட்டிகளும் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது உள்ளூராட்சி மன்றங்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் அவை தொடர்ந்தும் அகற்றப்படாமல் உள்ளதாக க.்.பே எனும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு கூறியது.

தாம் தேர்தலில் வேட்பாளராக நியமிக்கப்படுவாரா என்பதுகூட நிச்சயமாக தெரியாத நிலையில் சிலர் தேர்தல் சட்டத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி வருவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளனர். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபின் தேர்தல் சட்டத்தை மீறும் சம்பவங்கள் மோசமாக இடம்பெறப்போவதன் வெளிப்பாடே வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னரான இந்தப் பிரசாரம் என க.்.பே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார்.

# இலங்கையில் பிறநாட்டுத் தலையீட்டை

## பொறுத்துக் கொள்ளாது சீனா


(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் வேறு நாடுகள் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியான்கோ தெரிவித்துள்ளார். நாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் இறைமையை பாதுகாக்கும் முனைப்புக்களுக்கு சீன அரசாங்கமானது தன்னாலான உதவிகளை இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையில் மிக நீண்ட காலமாக கலாசார ரீதியான பிணைப்புக்கள் நீடித்து வருகின்றது.

சர்வதேச அரங்கில் எவ்வாறான நிலமைகள் ஏற்பட்டாலும் இலங்கை அரசுடன் சீன அரசானது தொடர்ந்தும் நட்புறவைப் பேணி வரும் என அவர் உறுதியளித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி 50 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கணினித் துறையில் தமிழ்ப் பணி ஆற்றிய ஆண்டோ பீற்றர் மரணம்



(கொழும்பு)

கணித்தமிழ் வளர்ச்சியின் முன்னோடியும், சி.எஸ்.சி, சொப்ட் வியூ நிறுவனத்தின் நிறுவுநரும், கணினித் தமிழ்ச்சங்கத்தை நிறுவிப் பணிபுரிந்தவரும், பலநூல்களின் ஆசிரியருமான மா. ஆண்டோபீற்றர் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் மாரடைப்பால் சென்னையில் இயற்கை எய்தினார். தந்தை பெரியார் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற இவர் உத்தமம் என்னும் உலகத் தமிழர் தகவல் ஒருங்கிணைப்பு அமைப்பில் இணைந்து பணிபுரிந்தவர்.

இவர் தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரியில் 26.04.1967 இல் பிறந்தவர். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். கணினி, இணையம், அச்சுத்துறை சார்ந்த பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். மென்பொருள் தயாரிப்பு, இணையப்பக்கம் வடிவமைப்பில் ஈடுபட்டவர். இவரின் மறைவு தமிழ் இணையத்துறைக்குப் பேரிழப்பு.

தமிழில் கணினி குறித்த விழிப்புணர்வை தமிழர்களிடையே அதிகப்படுத்தியவர் ஆண்டோ பீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் அதிக வயதான எலியாஸ் அப்புஹாமி காலமானார்



(கொழும்பு)

இலங்கையில் மிக வயதான நபராக கருதப்பட்ட களனி கோப்பியாவத்தையைச் சேர்ந்த 114 வயதான எலியாஸ் அப்புஹாமி காலமானார்.

இவர் நான்கு தலைமுறைகள் வாழ்ந்து, மகன், பேரன், பேத்தி, பூட்டன்களையும் சேர்ந்து 50 பேரை பார்த்துவிட்டார். 1898 பெப்ரவரி 13 ஆம் திகதி பிறந்த அப்புஹாமி இவ்வாறு நீண்ட ஆயுளைக் கொண்டிருந்தமைக்கு அவர் மாமிச உணவுகளை தவிர்த்து இயற்கை உணவுகளை உட்கொண்டமையே காரணம் என அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அவர் இறக்கும் வரையில் உடல் நலத்துடனும். சிறந்த மனநிலையிலும் இருந்தார் எனவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு நீண்ட ஆயுளைக் கொண்ட எலியாஸ் அப்புஹாமியின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் களனிப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

**CIMA பெறுபேற்றில் MCS சாதனை**

நேற்று வெளியான **CIMA Operational Level, Managerial Level** பாடநெறிகளில் **MCS** நிறுவன மாணவர்கள் சாதனைச் சித்திகளை பெற்றுள்ளனர். மாணவர்கள் சித்தி வீதம் முறையே F.M(67%), F.O(80%), P.O(70%),E.O(66%). இவ் உன்னத பெறுபேற்றுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த விரிவுரையாளர்களுக்கும் சித்திபெற்ற மாணவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். **MCS(**CIMA Listed College) 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தி யாழ்ப்பாணம். T.P 772 395 895

(C/1588)

# 29 மில்லியன் புத்தகங்கள் அச்சிட நடவடிக்கை

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டுக்குத் தேவையான பாடசாலை புத்தகங்கள் அச்சிடவென அமைச்சரவை அனுமதியுடன் 18 அச்சகங்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைய 322 வகையான 29 மில்லியன் புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன. அடுத்த வருடத்திற்கான பாடசாலை புத்தகங்கள் இவ்வருடம் டிசம்பர் மாத இறுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும். இதற்கென 1500 மில்லியன் செலவிடப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

# இமெல்டா சுகுமாருக்கு புதிய பதவி

(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சின் புதிய செயலாளராக யாழ். மாவட்ட முன்னாள் செயலாளர் இமெல்டா சுகுமார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட 17 அமைச்சுக்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் இவருக்கும் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை வீதிப் போக்குவரத்தில் நல்லூர் உற்சவ காலத்தில் மாற்றம்

நல்லூர் உற்சவ காலத்தில் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழிலிருந்து பருத்தித்துறைக்குமான போக்குவரத்து வீதி நல்லூர் பகுதியில் சிறிய மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வீதிப் போக்குவரத்து மாற்றம் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

இப்புதிய ஒழுங்கின்படி பருத்தித்துறை வீதி ஊடாக யாழ். நகருக்கு வரும் வாகனங்கள் மாநகர சபைக்கு முன்னால் உள்ள நல்லூர் குறுக்கு வீதியூடாக திருப்பப்பட்டு நாவலர் வீதி, இராசாவின் தோட்டம், ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி என்ற பாதையைப் பின்பற்றி மத்திய பேருந்து நிலையத்தை அடையும்.

யாழ். நகரிலிருந்து நல்லூர் பகுதியை விலத்தி பருத்தித்துறை வீதிக்குச் செல்லும் வாகனங்கள் பேருந்து நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரி வீதியூடாக கச்சேரி வரைக்கும் சென்று கச்சேரி, நல்லூர் வீதியூடாக முத்திரைச் சந்தியில் மீண்டும் பருத்தித்துறை வீதியில் இணையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பண மோசடியில் ஒருவர் கைது

பண வைப்புக்களை மேற்கொள்வோருக்கு கவர்ச்சிகரமான வட்டி வழங்கப்படுமெனக் கூறி பல மில்லியன் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் தொம்பே பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேகநபர் இப்பகுதி மக்களிடமிருந்து 57 மில்லியன் ரூபாவை பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் மாத்திரம் 30 மில்லியன் ரூபாவை வைப்பிலிட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வாக்குறுதியளிக்கப்பட்டவாறு 10 - 12 வீதம் வரையான மாதாந்த வட்டி வழங்கப்படாமையைத் தொடர்ந்து சந்தேகமடைந்த பண வைப்பாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தொம்பே பொலிஸார் பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலங்களை பதிவுசெய்துவருகின்றனர்.

# 2013 தேசத்துக்கு மகுடம் - ஜூலை 16

2013ஆம் ஆண்டுக்கான தேசத்துக்கு மகுடம் வேலைத் திட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஆரம்ப நிகழ்ச்சி ஜூலை 16 ஆம் திகதி மஹஓய அரலகம்வில நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணிகளுடன் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய. திட்டமிடல் அதிகாரிகள் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொள்வர்.

இதன்படி மஹஓய அரலகம்விலவில் 24 கிலோ மீட்டர் வரையிலான நெடுஞ்சாலை 250 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படுமென அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். அவ்வாறே அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ரம்புட்டான் பழச் சண்டை எண்மர் கைது

(கண்டி)

கண்டி பொது சந்தையில் ரம்புட்டான் பழம் விற்பனை தொடர்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற குழு மோதலுடன் தொடர்புடைய 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் மூவர் படுகாயமடைந்து கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு அதில் இருவரின் நிலை கவலைக்கிடம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதலுடன் தொடர்பு பட்டதாகக் கைது செய்யப்பட்டவர்களில் கண்டி நகர சபையின் உறுப்பினர் ரங்கனசிறி சில்வாவும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு இரும்புகள், கத்தி உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மோதல் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்று 144 குடும்பங்கள் முல்லையில் மீள்குடியேறுகின்றன

(முல்லைத்தீவு)

செட்டிகுளம் கதிர்காமர் நலன்புரி நிலையத்திலிருந்த 48 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேரும் ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையத்திலிருந்து 93 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேரும் இன்று அவர்களது சொந்த இடமான முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நலன்புரி முகாமிலிருந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின் அவரவர் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும், அவர்களுக்கு 3 நாட்களுக்கு சமைத்த உணவும், 2 லீற்றர் மண் எண்ணெய்யும் உலருணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இம்மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் மீள்குடியேற்றத்திற்கு தேவையான அத்தியாவசியமான உணவல்லாத பொருட்களும் 20 ஆயிரம் ரூபா பணமும் வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முள்ளிவாய்க்கால் மேற்கில் மீள்குடியேற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட 21 குடும்பங்களின் மீள்குடியேற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (04)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.